**அல்லாஹ்வின் கட்டளை**

اَلْيَوْمَ اَكْمَلْتُ لَكُمْ دِيْنَكُمْ
وَاَتْمَمْتُ عَلَيْكُمْ نِعْمَتِيْ
وَرَضِيْتُ لَكُمُ الْاِسْلَامَ دِيْنًا

இன்று நான் உங்களுக்காக, உங்கள் மார்க்கத்தை முழுமையாக்கியுள்ளேன். மேலும் உங்களுக்கு என் அருளை நிறைவு செய்துள்ளேன். மேலும் உங்களுக்கு மார்க்கமாக இஸ்லாத்தை தேர்ந்தெடுத்துள்ளேன். (5:4)

بسم اللہ الرحمن الرحیم    نحمدہ ونصلی علی رسولہ الکریم    وعلی عبدہ المسیح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ


தொகுதி 6

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

இதழ் 17

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

16 ரமலான் 1442 ஹிஜ்ரி கமரி 29 ஷஹாதத் 1400 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக் 29 ஏப்ரல் 2021


**அஹ்மதிய்யா செய்திகள்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**இறை இல்ஹாம்களின் மூலமாக சமுதாயத்திற்கும், இஸ்லாத்திற்கும் நன்மை ஏற்படுகின்றது. ஒருவர் இறைவன் புறமிருந்து தோன்றியவர் என்பதை சுட்டிக் காட்டுவதற்கு இந்த அளவுகோலே மாபெரும் அளவுகோல் ஆகும்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

## இறை இல்ஹாமிற்கான அளவுகோல்

வேதனை என்னவென்றால், இந்த மக்கள் புதிய புதிய சாதாரண இல்ஹாமிய வாக்கியங்கள் மற்றும் கனவுகள் மீது பெருமிதம் கொண்டு அமர்கின்றனர். ஓர் இல்ஹாம் இறைவன் புறமிருந்து இறங்கியது என்பதற்கும், ஷய்த்தானின் பங்கிலிருந்து பரிசுத்தமானது என்பதற்கும் என்ன அளவுகோல் இருக்கின்றது? என்பதை அவர்கள் புரிவதில்லை. அந்த இல்ஹாமுடன் இறை உதவியும், மறைவான ஞானத்தின் ஆற்றலும் இருக்கும். மேலும் அது வீணான கூற்றுகளாக இருக்காது. மேலும் மக்களுக்கு நன்மை பயக்க முடியாததாகவும் இருக்காது. ஒரு நபர் மாநாட்டின் நேரத்தில் தொலைவில் அமர்ந்து கொண்டு ஒரு மாபெரும் அரசனின் கூற்றுகளை மேலோட்டமாக செவிமடுத்து விட்டு நான் இன்ன அரசனின் கூற்றுகளை கேட்டு விட்டேன் என்று வந்து கூறினால் அதனால் மற்றவர்களுக்கு என்ன நன்மை ஏற்பட முடியும்? ஆனால் அரசரின் நெருக்கத்தை பெற்ற பிறகு கிடைக்கின்ற கூற்றுகளின் அடையாளங்கள் வேறொன்றாக இருக்கும். அதைக்கேட்டு விட்டு ஓர் அறிஞர் சுயமாக இதனைக் கூறி விடுவார். அதாவது இன்ன கூற்று உள்ளபடியே அரசரின் முழுமையான, செறிவுமிக்க கூற்றாகும். எனது இல்ஹாமும் ஒருவேளை சாதாரணமாகவும், வீணான துண்டுகளாகவும் இருந்திருந்தால் மேலும் அவை ஒவ்வொன்றிலும் மறைவான ஞானமும், வல்லமைமிக்க முன்னறிவிப்புகளும் இல்லாமல் இருந்திருந்தால் நான் அதனை ஒன்றுமற்றதாகவே புரிந்திருப்பேன்.

லேக்கராமைப் பற்றிய முன்னறிவிப்பைப் போன்று ஒருவர் ஒரு முன்னறிவிப்பை எனக்கு காட்டட்டும். **இறை இல்ஹாம்களின் மூலமாக சமுதாயத்திற்கும், இஸ்லாத்திற்கும் நன்மை ஏற்படுகின்றது. ஒருவர் இறைவன் புறமிருந்து தோன்றியவர் என்பதை சுட்டிக் காட்டுவதற்கு இந்த அளவுகோலே மாபெரும் அளவுகோல் ஆகும்.** என்னுடன் இறைவனுடைய விவகாரமும், ஆதிக்கமும், அவனது அடையாளங்களும் எனக்கு ஆதரவாக உள்ளன. சில (இல்ஹாம்கள்) எனது சொந்த இருப்பைப் பற்றியதாகும். சில (இல்ஹாம்கள்) எனது சந்ததிகளுடன் தொடர்புடையதாகும். வேறு சில (இல்ஹாம்கள்) எதிரிகளுடன் தொடர்புடையதாகும். மற்றும் வேறு சில இல்ஹாம்கள் பொது மக்களுடன் தொடர்புடையதாகும். (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 281 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

---

## நபிமொழி

(1237) ஹஸ்ரத் அபூஸர் (கஃப்பாரி) (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: எனது இறைவனிடமிருந்து வரக்கூடிய ஒருவர் என்னிடத்தில் வந்தார். அவர் எனக்கு கூறினார். அல்லது எனக்கு இவ்வாறு நற்செய்தி வழங்கினார் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அதாவது எனது உம்மத்திலிருந்து எவர் அல்லாஹ்வுடன் எதனையும் இணையாக்காத நிலையில் மரணிப்பாரோ அவர் சுவர்க்கத்திற்கு செல்வார்.

(1238) ஹஸ்ரத் அப்துல்லாஹ் (பின் மசூது) (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: எவர் அல்லாஹ்வுக்கு ஒன்றை இணையாக்கிய நிலையில் மரணிப்பாரோ அவர் நெருப்பில் நுழைவார். மேலும் நான் (அதாவது அப்துல்லாஹ் பின் மசூது) கூறுகின்றேன்: எவர் எதனையும் அல்லாஹ்வுக்கு இணையாக்காத நிலையில் மரணிப்பாரோ அவர் சொர்க்கத்தில் நுழைவார்.

(1239) ஹஸ்ரத் பரா (பின் ஆஸிப்) (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். எங்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏழு விஷயங்களை செய்யுமாறு கட்டளையிட்டார்கள். மேலும் ஏழு விஷயங்களை செய்வதிலிருந்து தடுத்து நிறுத்தினார்கள். ஜனாஸாக்களை பின் தொடர்ந்து செல்லும்படியும், நோயாளிகளை நலம் விசாரிக்கும்படியும், விருந்துக்கு அழைக்கக்கூடியவரின் அழைப்பை ஒப்புக் கொள்ளும்படியும், அநீதியிழைக்கப்பட்டவருக்கு உதவி செய்யும்படியும், சத்தியத்தை முழுமை செய்யும்படியும், சலாத்திற்கு பதில் கூறும்படியும், தும்மக்கூடியவருக்கு துஆ செய்யும்படியும் எங்களுக்கு கட்டளையிட்டார்கள். வெள்ளி பாத்திரம், தங்க மோதிரம், பட்டாடை ஆகியவற்றை பயன்படுத்துவதிலிருந்து எங்களை தடை செய்தார்கள்.

(ஸஹீஹ் புகாரி, தொகுதி 2, கிதாபுல் ஜனாயிஸ் – 2006 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

......☆......☆......☆......


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**மஸீஹ் மவ்வூது தினம் – மார்ச் 23**

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வருகையின் அவசியமும், நோக்கமும் – அன்னாரின் எழுத்துக்களின் ஒளியில்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுஃல்லாஹுஃத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 26 மார்ச் 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **அமான்** மாதம் **26 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

هُوَ الَّذِىْ بَعَثَ فِى الْاُمِّيّٖنَ رَسُوْلًا مِّنْهُمْ يَتْلُوْا عَلَيْهِمْ اٰيٰتِهٖ وَيُزَكِّيْهِمْ وَيُعَلِّمُهُمُ الْكِتٰبَ وَالْحِكْمَةَ ۚ وَاِنْ كَانُوْا مِنْ قَبْلُ لَفِىْ ضَلٰلٍ مُّبِيْنٍ

“அவனே எழுதப்படிக்கத் தெரியாத மக்களுக்கு – அவர்கள் இதற்கு முன்னர் தெளிவான வழிகேட்டில் இருந்தபோதிலும் – அவனது கட்டளைகளைப் படித்துக் காட்டி அவர்களைத் தூய்மைப்படுத்தி, அவர்களுக்கு வேதத்தையும், நுட்பமான ஞானத்தையும் கற்றுக் கொடுக்கும் ஒரு தூதரை அவர்களிலிருந்தே அனுப்பினான்.” (62:03)

وَّاٰخَرِيْنَ مِنْهُمْ لَمَّا يَلْحَقُوْا بِهِمْ ۭ وَهُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ

“மேலும் இதுவரை அவர்களுடன் சேராத மற்றவர்களுக்கிடையிலும் (அவரை எழுப்புவான்). அவன் வல்லமைமிக்கவனும், நுண்ணறிவுற்றவனுமாவான்.” (62:4)

இரண்டு, மூன்று நாட்களுக்கு முன் மார்ச் 23–ஆம் தேதி கடந்தது. அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இந்த நாள் எவ்வாறு நினைவு கூறப்படுகிறதென்றால், இந்த நாளில் ஜமாஅத்திற்கான அடித்தளமிடப்பட்டது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் (அன்றைய தினம்) பைஅத் வாங்கினார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின் நோக்கம் – திருக்குர்ஆனின் முன்னறிவிப்புகள் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகளுக்கேற்ப மார்க்கத்தை புதுப்பிப்பதாகவும், இஸ்லாத்தின் உண்மையான போதனைகளை உலகில் நிலைநாட்டுவதாகவும் உள்ளது என்பதை இந்த நாள் ஒவ்வொரு வருடமும் நமக்கு நினைவூட்டிக் கொண்டிருக்க வேண்டும். அன்னாருடைய பைஅத்தில் இணைந்து விட்டதாக நாம் வாதம் செய்கிறோம். இந்த முக்கிய பணியை செய்து முடிக்க நாமும் நமது திறன்களுக்கேற்ப இதில் பங்கெடுக்க வேண்டும். மேலும் வழிதவறிப்போன மனிதர்களை இறைவனுடன் இணைக்க வேண்டும். பரஸ்பரம் ஒருவர் மற்றவரின் உரிமைகளை செலுத்துமாறு அடியார்களுக்கு கவனமூட்ட வேண்டும். இதற்காக முதலில், நாம் நம்மை சீர்திருத்துவது அவசியமாகும்.

எவ்வாறிருப்பினும், இப்போது நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சில மேற்கோள்களை எடுத்துரைப்பேன். அதில் அன்னாரது வருகையின் அவசியம் மற்றும் நோக்கம் குறித்து திருக்குர்ஆன், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகள் எவ்வாறு நிறைவேறின; நிறைவேறிக் கொண்டிருக்கின்றன என்பது கூறப்படும்.

இவற்றின் மூலமாக அன்னாரின் உண்மைத்துவத்திற்கான சான்று கிடைக்கின்றது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் (தமது) ஜமாஅத்தில் தோன்ற இருக்கும் தூய மாறுதல்களைக் குறித்து கூறியுள்ளார்கள். அதனையும் நான் எடுத்துரைப்பேன். அது எவ்வாறான தூய மாற்றங்கள் என்றால் சஹாபிகளிடம் அது தோன்றியது. சஹாபிகள் எவ்வாறான துன்பங்களைக் கடந்தார்களோ அதேபோன்ற துன்பங்களை ஜமாஅத் அன்பர்களும் கடக்கிறார்கள். ஜமாஅத் என்ற அடிப்படையில் நாம் முன்னேறக் கூடியவர்களாக இருக்க வேண்டுமேயொழிய, பின்னடைவைச் சந்திப்பவர்களாக ஆகி விடக்கூடாது. ஆகவே நாம் எப்போதும் இந்த விஷயங்களை நம் முன் வைக்க வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தம் வருகையின் நோக்கம் மற்றும் உண்மைத்துவம் குறித்து இறைவனை சாட்சியாக வைத்து அறிவிப்பு செய்தார்கள். இது நிச்சயமாக நமது ஈமானுக்கு வலு சேர்க்கின்றது. இவ்விஷயங்களை நாம் அசைபோட்டுக் கொண்டிருந்தால் எல்லா நேரமும் கண் முன் வைத்திருந்தால், நிச்சயமாக இவை நமது ஈமானை முன்னேற்றக்கூடிய காரணியாக அமைந்து கொண்டே செல்லும். மேலும் நமது குறிக்கோளின் பக்கம் கவனமூட்டக்கூடியதாக இவை ஆகிக் கொண்டே செல்லும். எவ்வாறிருப்பினும் நான் கூறியதுபோன்று மேற்கோள்களை எடுத்து வைக்கிறேன். இது நமக்கும் பிறருக்குமான போதனையாகும். அன்னார் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்ற விஷயத்தை பகல் வெளிச்சத்தைப்போன்று தெளிவாக எடுத்து வைக்கும் மேற்கோள்களாகும்.

நான் ஓதிய வசனங்களை விளக்கியாவது ஓரிடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

இந்த வசனத்தின் கருத்து என்னவென்றால், கல்வி மற்றும் ஞானத்தை விட்டு மக்கள் பேறிழந்தவர்களாக ஆகிவிட்ட நேரத்தில் இறைவன் தூதரை அனுப்பினான். ஆன்மா முழுமையடையக்கூடிய வழிமுறை மற்றும் மனித ஆன்மாக்கள் அறிவு மற்றும் செயலில் முழுமை பெறக்கூடிய நுட்பமான மார்க்க ஞானங்கள் முற்றிலும் தொலைந்து போன நேரமாக இருந்தது. மக்கள் வழிகேட்டில் மூழ்கியிருந்தனர். அதாவது, இறைவனை விட்டும் அவனது நேரான பாதையை விட்டும் வெகு தூரம் விலகிச் சென்று விட்டனர். அவ்வாறான நேரத்தில் இறைவன் தனது எழுதப்படிக்கத் தெரியாத தூதரை அனுப்பினான். மேலும் அந்தத் தூதர், அவர்களின் உள்ளங்களை தூய்மைப்படுத்தினார். வேதத்தின் அறிவையும், ஞானத்தையும் கொண்டு அவர்களை நிரப்பினார். அதாவது அடையாளங்கள் மற்றும் அற்புதங்களினால் முழுமையான திட நம்பிக்கை எனும் அந்தஸ்து வரை கொண்டு சென்றார். மேலும் இறைவனை அடையாளம் கண்டு கொள்ளுதல் எனும் ஒளியால் அவர்களின் உள்ளங்களை ஒளிமயமாக்கினார்.

பிறகு (இறைவன்) கூறுகிறான்: இறுதிக் காலத்தில் தோன்றும் இன்னொரு கூட்டமும் உண்டு. அவர்களும் ஆரம்பத்தில் இருள் மற்றும் வழிகேட்டில் இருப்பார்கள். மேலும் கல்வி, ஞானம் மற்றும் நம்பிக்கையை விட்டு வெகு தூரத்தில் இருப்பார்கள். அப்போது இறைவன் அவர்களையும் சஹாபிகளின் நிலையில் கொண்டு வருவான். அதாவது எவற்றையெல்லாம் சஹாபிகள் கண்டார்களோ அவை இவர்களுக்கும் காட்டப்படும். எந்த அளவு என்றால் அவர்களின் உண்மைத்துவம் மற்றும் திட நம்பிக்கை சஹாபிகளின் உண்மைத்துவம் மற்றும் திட நம்பிக்கைக்கு ஒப்பானதாக ஆகி விடும்.

ஆகவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பைஅத்தில் வந்த பிறகு அன்னாரது உண்மைத்துவம் குறித்து நமக்கு இவ்வாறான நம்பிக்கை ஏற்பட வேண்டும். நமது ஈமானுடைய நிலை இவ்வாறு இருக்க வேண்டும். இறைவன் மீது நம்பிக்கை, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை ஆகியவை சஹாபிகளுக்கு இருந்ததுபோன்று இருக்க வேண்டும். தற்காலத்தில் நான் சஹாபிகளின் நிலைகளைக் குறித்து குத்பாக்களில் எடுத்துரைத்து வருகிறேன். நமக்கு முன்னால் முன்னுதாரணங்கள் உள்ளன. அவ்வாறு நாம் இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: சஹீஹான ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வசனத்திற்கு விளக்கமளிக்கும்போது சல்மான் ஃபார்ஸி அவர்களின் தோளின் மீது கை வைத்து, لَوْ كَانَ الْاِيْمَانُ مُعَلَّقًا بِالثُّرَيَّا لَنَالَهٗ رَجُلٌ مِّنْ فَارِس என்று கூறினார்கள். அதாவது ஈமான் கார்த்திகை நட்சத்திரம் வரை சென்று விட்டாலும், வானம் வரை சென்று விட்டாலும் பாரசீக வம்சத்தைச் சேர்ந்த ஒரு நபர் அதை திருப்பிக் கொண்டு வருவார். அன்னார் சுட்டிக்காட்டிய விஷயம் என்னவென்றால், இறுதிக் காலத்தில் பாரசீக வம்சத்தைச் சேர்ந்த ஒருவர் தோன்றுவார் என்பதாகும். அந்தக் காலத்தில் திருக்குர்ஆன் வானத்திற்கு உயர்த்தப்பட்டு விடும் என்று எழுதப்பட்டுள்ளது. அதுவே வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலமாகும். அதாவது இஸ்லாமிய போதனையும், திருக்குர்ஆனின் போதனையும் முற்றிலும் மறக்கடிக்கப்பட்டிருக்கும். பாரசீக வம்சத்தைச் சேர்ந்தவர் யாரெனில் அவர்தான் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆவார். ஏனென்றால் சிலுவை தாக்குதலை முறியடிப்பதற்காக வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வர வேண்டியதுள்ளது. அந்தத் தாக்குதல் ஈமான் மீது செய்யப்படும். இந்த அனைத்து அடையாளங்களும் சிலுவை தாக்குதலின் காலத்தைக் குறித்தே கூறப்பட்டுள்ளன. அந்த தாக்குதல் மக்களின் ஈமானின் மீது மிக தீய தாக்கம் ஏற்படும் என்று எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில், அன்னாருடைய வாழ்வில் இந்த கடும் தாக்குதல்கள் நடந்தன. மிக நீண்ட காலம் வரை இந்த தாக்குதல்கள் தொடர்ந்தன. வரலாறு இதற்கு சாட்சியாக உள்ளது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: இது எவ்வாறான தாக்குதல் என்றால் வேறொரு சொல்லில் இது தஜ்ஜாலிய தாக்குதுல் என்று கூறப்படுகிறது. அந்த தஜ்ஜாலுடைய தாக்குதல் நேரத்தில் பல அறிவற்றவர்கள் ஈடு இணைற்ற ஓரிறைவனை விட்டு விடுவார்கள் என்றும், பலரின் ஈமானிய நேசம் குளிர்ந்து விடும் என்றும், வாக்களிக்கப்பட்ட மஸீஹின் மிகப்பெரும் பணி ஈமானை புதுப்பிப்பதாக இருக்கும் என்றும் அடையாளங்களாக கூறப்பட்டுள்ளன. ஏனென்றால் தாக்குதல் ஈமானின் மீது இருக்கும். ஈமான் கார்த்திகை நட்சத்திரம் வரை சென்று விட்டாலும் என்று கூறப்பட்டுள்ள ஹதீஸில் பாரசீக வம்சத்தைச் சார்ந்தவர் என்று வந்துள்ளது. அவர் ஈமானை மீண்டும் நிலைநாட்ட தோன்றுவார். ஆகவே வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலமும், பாரசீக வம்சத்தைச் சார்ந்தவரின் காலமும் ஒன்றே ஆகும். இருவரின் கவலைகளும் ஒன்றே ஆகும். அதாவது ஈமானை திரும்ப நிலைநாட்டுவதாகும். ஆகவே வாக்களிக்கப்பட்ட மஸீஹ் பாரசீக வம்சத்தைச் சார்ந்தவர் என்பது நிரூபணமாகிறது. மேலும் அவருடைய ஜமாஅத்தைக் குறித்தே وَّاٰخَرِيْنَ مِنْهُمْ لَمَّا يَلْحَقُوْا بِهِمْ ؕ என்று கூறப்பட்டுள்ளது.

இந்த வசனத்தின் பொருள் என்னவென்றால், முழுமையான இருளுக்குப் பிறகு நேர்வழி மற்றும் ஞானத்தைப் பெறக்கூடியவர்கள் இரு கூட்டத்தினர் மட்டுமே ஆவார்கள். முதலாமவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபிகள் ஆவர். இவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோற்றத்திற்கு முன்பு கடும் இருளில் மூழ்கியிருந்தனர். அதன் பிறகு இறை அருளால் நுபுவ்வத்தின் காலத்தை அவர்கள் பெற்றார்கள். தமது கண்களால் அற்புதங்களைக் கண்டனர். முன்னறிவிப்புகளைக் கண்டனர். மேலும் திட நம்பிக்கை அவர்களிடத்தில் எவ்வாறான மாற்றத்தை ஏற்படுத்தியது என்றால், ஒரே ஆன்மாவாக மாறி விட்டனர். மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் கூறப்பட்டுள்ளதைப் போன்று அந்த இரண்டாவது கூட்டத்தினர் சஹாபிகளுக்கு ஒப்பானவர்களாக இருப்பார்கள். அவர்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் கூட்டத்தினர் ஆவர். ஏனென்றால் இந்தக் கூட்டமும் சஹாபிகளுக்கு ஒப்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அற்புதங்களை காணக் கூடியதாகும். இருள் மற்றும் வழிகேட்டிற்குப் பிறகு நேர்வழியைப் பெறக்கூடியதாகும்.

மேலும் اٰخَرِيْنَ مِنْهُمْ என்ற வசனத்தில் ‘அவர்களுடன் சேராத மற்றவர்கள்’ எனும் அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. அதாவது சஹாபிகளுக்கு ஒப்பானவர்கள் எனும் அருளிலிருந்து பங்கு கொடுக்கப்பட்டுள்ளது. இது அந்த அந்தஸ்தையே சுட்டிக் காட்டுகிறது.

அன்னார் கூறுகிறார்கள்: தற்போது அது தான் நடந்துள்ளது. 1300 வருடங்களுக்குப் பிறகு மீண்டும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அற்புதத்தின் வாசல் திறந்து விட்டது. தாரே குத்னீ ஹதீஸ் மற்றும் ஃபதாவா இப்னு ஹஜரில் கூறப்பட்டிருப்பது போன்று ரமலான் மாதத்தில் சூரிய, சந்திர கிரகணங்கள் தோன்றியதை மக்கள் தமது கண்களால் கண்டனர். அதாவது சூரிய, சந்திர கிரகணங்கள் ரமானில் வந்தன. மேலும் ஹதீஸில் கூறப்பட்டிருப்பதுபோன்று, சந்திர கிரகணம் தமது கிரகணத்திற்குரிய இரவுகளில் முதல் இரவிலும், சூரிய கிரகணம் – தமது கிரகணத்திற்குரிய நாட்களில் மத்திய நாளிலும் தோன்றியது. அவ்வாறான நேரத்தில் மஹ்தி என்று வாதிப்பவர் இருந்தார். வானமும், பூமியும் தோன்றிய நாள் முதல் இதுபோன்ற சூழ்நிலை ஒருபோதும் வெளிப்பட்டது கிடையாது. ஏனென்றால், வரலாற்றின் பக்கங்களில் இதற்கு நிகரான ஒன்றை எம்மனிதரும் இதுவரை காட்டியதில்லை. இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஓர் அற்புதமாக இருந்தது. மக்கள் கண்களால் இதைக் கண்டனர்.

பிறகு மஹ்தி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலத்தில் வெளிப்படும் என்று கூறப்பட்டுள்ள வால் நட்சத்திரம் வெளிப்பட்டது. அது வெளிப்பட்டதை ஆயிரக்கணக்கான மக்கள் கண்டனர். இதேபோன்று ஜாவாவில் வெளிப்பட்ட நெருப்பையும் இலட்சக்கணக்கான மனிதர்கள் கண்டனர். அவ்வாறே, பிளேக் நோய் பரவுதல், ஹஜ் செய்வதை விட்டு தடுத்தல் போன்றவற்றையும் தமது கண்களால் அனைவரும் கண்டனர். நாட்டில் ரயில் கண்டுபிடிக்கப்படுதல், ஒட்டகங்கள் பயனற்று போகுதல் ஆகிய இவ்வனைத்தும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அற்புதங்களாகும். சஹாபிகள் அற்புதங்களைக் கண்டதுபோன்றே இவை இக்காலத்தில் கண்டுணரப்பட்டன. இதன் காரணமாகத்தான் அல்லாஹ் அந்த இறுதி கூட்டத்தை மின்ஹும் مِنْهُمْ என்ற சொல்லால் அழைத்துள்ளான். அதாவது அற்புதங்களைக் கண்டதில் அவர்களும் சஹாபிகளைப் போன்றவர்களே ஆவர் என சுட்டிக் காட்டியுள்ளான். 1300 வருட காலத்தில் இவ்வாறான நபித்துவ காலத்தை யார் பெற்றார்கள்? என சிந்தித்துப் பாருங்கள்!

இக்காலத்தில் நம்முடைய ஜமாஅத் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. பல காரணங்களினால் இந்த ஜமாஅத் சஹாபிகளுடன் ஒப்புமை பெற்றுள்ளது. சஹாபிகள் பார்த்ததுபோன்று அவர்கள் அற்புதங்களையும், அடையாளங்களையும் காண்கின்றனர். சஹாபிகள் பெற்றதுபோன்று அவர்கள் இறை அடையாளங்கள் மற்றும் புத்தம்புதிய ஒத்தாசைகளின் மூலமாக ஒளியையும், நம்பிக்கையையும் பெறுகிறார்கள். சஹாபிகளுக்கு நேர்ந்ததுபோன்று இறைவழியில் மக்களின் கேலி கிண்டல், ஏச்சுப்பேச்சு, பல்வேறு வகையான உள்ளத்தை காயப்படுத்தும் சொற்கள், தீய வார்த்தைகள், கருணையற்ற நடைமுறை போன்றவற்றின் துன்பத்தை சந்திக்கின்றனர். சஹாபிகள் பெற்றதுபோன்று, இறைவனின் தெளிவான அடையாளங்கள், வானத்தின் உதவிகள் மற்றும் ஞானமிகு போதனைகளால் அவர்களும் தூய வாழ்வை பெறுகின்றனர். இது மிகப்பெரிய விஷயமாகும். ஞானமிகு போதனையால் தூய வாழ்வை பெற வேண்டும் என்பதை எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டும். திருக்குர்ஆனை ஆழ்ந்து சிந்திப்பது மிக அவசியமாகும்.

அன்னார் கூறுகிறார்கள்: சஹாபிகள் அழுததைப் போன்று அவர்களில் பெரும்பாலார் தொழுகையில் அழுகின்றனர். மேலும் சஜ்தா செய்யும் இடங்களை கண்ணீரால் நனைத்து விடுகின்றனர். சஹாபிகள் இருந்ததுபோன்று, அவர்களில் பெரும்பாலாருக்கு உண்மையான கனவுகள் வருகின்றன. மேலும் அவர்கள் இல்ஹாமை பெறக்கூடியவர்களாக இருக்கின்றனர். சஹாபிகள் செலவழித்ததுபோன்று அவர்களில் பெரும்பாலார் தம் உழைப்பால் சம்பாதித்த செல்வத்தை இறை விருப்பங்களுக்காக மட்டும் நமது இயக்கத்திற்காக செலவழிக்கின்றனர். மேலும் மரணத்தை நினைவுபடுத்திக் கொண்டிருக்கும் பலரை அவர்களில் நீங்கள் காண்பீர்கள்.

இதுவும் மிக முக்கிய விஷயமாகும். மரணத்தை எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டும். மேலும் அவர்களில் பெரும்பாலார் மென்மையான உள்ளம் மற்றும் உண்மையான இறையச்சத்தில் இருப்பதை காண்பீர்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறிய இவ்விஷயங்கள் மிக முக்கியமானதாகும். இதை நாம் எந்நேரமும் நம் முன்

வைக்க வேண்டும். சஹாபிகளின் வாழ்க்கையாக அது உள்ளது. அது இறைவனின் கட்டளையாகும். அதை இறைவனே பராமரிக்கின்றான். நாளொரு மேனியாக அவர்களின் உள்ளங்களை தூய்மைப்படுத்துகின்றான். மேலும் அவர்களின் நெஞ்சங்களை ஈமானிய ஞானங்களால் நிரப்புகிறான்.

இவ்வனைத்து விஷயங்களும் நமக்குள்ளும் உருவாகின்றதா என்றும், சஹாபிகளுக்கு ஈர்த்ததுபோன்று வானத்தின் அடையாளங்கள் மூலமாக அவற்றை தம் பக்கம் ஈர்க்கின்றதா என்றும் நாம் நம்மை சோதித்துப் பார்க்க வேண்டும். சுருக்கமாக, آخَرِيْنَ مِنْهُمْ என்ற சொல்லிலிருந்து உணரப்படுகின்ற அந்த அனைத்து அடையாளங்களும் இந்த ஜமாஅத்தில் காணப்படுகின்றது. மேலும் இறைவனுடைய கூற்று ஒரு நாள் நிச்சயமாக நிறைவேறியே தீரும்.

(அய்யாமுஸ் சுலஹ், ரூஹானீ கஸாயின் தொகுதி 14 பக்கம் 304–307)

பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: இது எவ்வாறான காலம் என்றால், பல்வேறு பிரிவுகளை ஒரே சமுதாயமாக ஆக்க இறைவன் நாட்டம் கொண்டுள்ளான். மேலும் மார்க்கச் சண்டைகளை முடிவுக்கு கொண்டு வந்து அனைவரையும் இறுதியில் ஒரே மார்க்கத்தில் ஒன்றுசேர்க்க நாட்டம் கொண்டுள்ள காலமாகும். அலைகளின் ஆதிக்கம்மிக்க இக்காலத்தைக் குறித்து இறைவன் திருக்குர்ஆனில் وَنُفِخَ فِي الصُّوْرِ فَجَمَعْنٰهُمْ جَمْعًا (எக்காலம் ஊதப்படும்போது நாம் அவர்கள் எல்லோரையும் ஒன்று திரட்டுவோம்) என்று கூறுகிறான்.

இந்த வசனத்தை முந்தைய வசனங்களோடு இணைத்துப் பார்க்கும்போது கிடைக்கும் பொருள் என்னவென்றால், எந்த காலத்தில் உலகில் மார்க்கங்களின் பேரொலி எழும்புமோ, ஒரு அலை இன்னொரு அலையின் மீது விழுவது போன்று ஒரு மார்க்கம் இன்னொரு மார்க்கத்தின் மீது விழுந்து ஒருவர் மற்றவரை ஒழிக்க நினைக்கும்போது அலைகளின் ஆதிக்கமிகு காலத்தில் எவ்வித உலக ஏற்பாடுமின்றி வானம் மற்றும் பூமியின் இறைவன் தம் கைகளால் ஒரு புதிய இயக்கத்தை உருவாக்குவான். எவர்களிடத்தில் திறமையும், பொருத்தமான தன்மையும் இருக்குமோ அவர்கள் அனைவரையும் அந்த இயக்கத்தில் ஒன்று சேர்ப்பான். மார்க்கம் என்றால் என்ன? என்பதை அவர்கள் அப்போது உணர்வர். அவர்கள் மீது வாழ்வு மற்றும் உண்மையான நான்மையின் ஆன்மா ஊதப்படும். இறைஞானம் எனும் பானம் அவர்களுக்கு அருந்தக் கொடுக்கப்படும். இன்றிலிருந்து 1300 ஆண்டுகளுக்கு முன் திருக்குர்ஆன் உலகின் முன்னால் எடுத்து வைத்த முன்னறிவிப்பு நிறைவேறாத வரை இந்தத் தொடர் முறிந்து போகாது என்பது நிச்சயமாகும்.

அனைத்து சமுதாயங்களும் ஒரே மார்க்கத்தில் ஒன்றிணைக்கப்படும் இறுதி காலத்தைக் குறித்து இறைவன் ஒரே ஒரு அடையாளத்தை மட்டும் கூறவில்லை. மாறாக, திருக்குர்ஆனில் இன்னும் பல அடையாளங்கள் கூறப்பட்டுள்ளன. உதாரணமாக, அக்காலத்தில் நதிகளிலிருந்து பல ஆறுகள் வெளிப்படும் என்றும், பூமியின் மறைவான காதுகள் அதாவது பல்வேறு கனிம வளங்கள் வெளிப்படும் என்றும், பல்வேறு புவியியல் அறிவு வெளிப்படும் என்றும், நூல்கள் பல்கிப் பெருகி விடும் என்றும் அளவீடு கருவிகள் உருவாகிவிடும் என்றும் கூறப்பட்டுள்ளன. மேலும் அந்நாட்களில் எவ்வாறான வாகனம் தோன்றி விடும் என்றால் அது ஒட்டகங்களைப் பயனற்றதாக ஆக்கி விடும். அவற்றின் மூலமாக சந்திக்கும் வழிமுறை எளிதாகி விடும். மேலும் உலகில் பரஸ்பர தொடர்புகள் எளிதாகி விடும். ஒருவர் மற்றவருக்கு செய்திகளை எளிதாக கொண்டு சேர்க்க முடியும். (மேலும் இக்காலத்தில் வசதிகள் இன்றும் அதிகமாக உருவாகிக் கொண்டே செல்கின்றன.) மேலும் அந்நாட்களில் வானில் ஒரே மாதத்தில் சூரிய சந்திர கிரகணம் ஏற்படும். மேலும் அதன் பிறகு பூமியில் கடுமையான பிளேக் நோய் பரவும். பிளேக்கினால் பாதிக்காத எந்த நகரமும், கிராமமும் எஞ்சியிருக்காது. உலகில் பெரும் மரணங்கள் நிகழும். உலகம் வெறிச்சோடி விடும். சில குடியிருப்புகள் முற்றிலும் அழிந்து போய்விடும். அவற்றின் பெயரும் அடையாளமும் எஞ்சியிருக்காது. மேலும் சில குடியிருப்புகள் ஓரளவு தண்டனையில் பிடிக்கப்பட்டு பிறகு அவை காப்பாற்றப்படும். இந்த நாட்கள் இறைவனின் கடும் கோபத்தின் நாட்களாகும். ஏனென்றால் அவனால் அனுப்பப்பட்டிருப்பவருக்காக இறைவன் இக்காலத்தில் வெளிப்படுத்திய அடையாளங்களை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

மேலும் படைப்பினங்களின் சீர்திருத்தத்திற்காக வந்த இறைவனின் நபியை இவர்கள் நிராகரித்து விட்டனர். அவரை பொய்யராக்கி விட்டனர். இந்த அனைத்து அடையாளங்களும் நாம் வாழும் இக்காலத்தில் நிறைவேறிவிட்டன. அறிவுடையவருக்கு இது தெளிவான, ஒளிமிக்க பாதையாகும். திருக்குர்ஆனில் எழுதப்பட்ட அனைத்து அடையாளங்களும் எனது வருகைக்காக வெளிப்பட்டிருக்கும் காலத்தில் இறைவன் என்னை அனுப்பியுள்ளான்.

(லெக்சர் சியால்கோட், ரூஹானீ கஸாயீன் தொகுதி 20 பக்கம் 182–184)

இந்த அனைத்தும் அன்னாருடைய காலத்தில் நிறைவேறி விட்டன என்பதற்கு வரலாறு சான்றாக உள்ளது. மேலும் அவற்றில் சில இப்பொழுது வரை நிறைவேறிக் கொண்டே செல்கின்றன.

பிறகு அன்னார் கூறுகிறார்கள்: இறைவன் இக்காலத்தின் தற்போதைய நிலையைக் கண்டு, பூமி பல்வேறு வகையான தீமை, பாவம் மற்றும் வழிகேட்டால் நிரம்பியதைக் கண்டு, உண்மையை எட்ட வைக்கவும், சீர்திருத்தவும் என்னை நியமித்தான். இது எவ்வாறான காலம் என்றால், மக்கள் ஹிஜ்ரி 13 ஆம் நூற்றாண்டை கடந்து 14 ஆம் நூற்றாண்டை அடைந்து விட்டனர். அப்போது நான் இக்கட்டளைக்கு கட்டுப்பட்டவாறு பொது மக்களிடத்தில் பிரசுரங்கள் மற்றும் சொற்பொழிவுகள் மூலமாக, இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் இறைவன் சார்பாக மார்க்கத்தை புதுப்பிப்பதற்காக வரக்கூடியவர் வந்து விட்டார். அது நான் தான் என்று அறிவிப்பு செய்தேன்.

பூமியில் இருந்து வெளியேறிவிட்ட ஈமானை மீண்டும் நிலைநாட்டவும், இறைவனிடமிருந்து ஆற்றல் பெற்று அவனுடைய கையின் ஈர்ப்பைக் கொண்டு உலகை சீர்திருத்தவும், இறையச்சம் மற்றும் நன்மையின் பக்கம் ஈர்க்க வேண்டும் என்பதற்காகவும், அவற்றின் கொள்கை ரீதியான மற்றும் செயல் ரீதியான தவறுகளை நீக்க வேண்டும் என்பதற்காகவும் என்னை இறைவன் நியமித்துள்ளான்.

மேலும் இதன் பிறகு சில வருடங்கள் கழிந்தவுடன், இந்த சமுதாயத்திற்காக ஆரம்பம் முதலே வாக்களிக்கப்பட்ட அந்த மஸீஹும், இஸ்லாம் வீழ்ச்சியடையும் காலத்தில் மேலும் குழப்பம் பரவும் காலத்தில் நேரடியாக இறைவனிடமிருந்து நேர்வழியைப் பெறும் அந்த மஹ்தியும், இன்றிலிருந்து 1300 வருடங்களுக்கு முன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் நற்செய்தி கூறப்பட்ட வானத்தின் உணவை புதிய வகையில் மனிதர்களுக்கு முன்னால் எடுத்துவைக்கப் போகின்ற இறை நியதியில் தீர்மானிக்கப்பட்ட அந்த நபரும் நானே ஆவேன் என்று இறை வஹீயின் மூலமாக என் மீது தெள்ளத் தெளிவாக்கப்பட்டது.

இறை உரையாடல்களும், அளவற்ற அருளாளனின் சம்பாஷனைகளும் எந்த அளவு தெளிவாகவும், தொடர்ச்சியாகவும் இது குறித்து நிகழ்ந்தது என்றால் எவ்வித சந்தேகத்திற்கும் இடமில்லை. வரக்கூடிய ஒவ்வொரு வஹீயும் உறுதியான ஆணியைப் போன்று உள்ளத்தில் இறங்கியது. மேலும் இந்த அனைத்து இறை உரையாடல்களும் எவ்வாறான மாபெரும் முன்னறிவிப்புகளால் நிரம்பி காணப்பட்டன என்றால், அவை பகல் வெளிச்சத்தைப்போன்று நிறைவேறின. மேலும் அவற்றின் தொடர்ச்சியும், மிகுதியும், அதிசய ஆற்றல்களின் வசீகரமும் என்னை எந்த அளவுக்கு நிர்ப்பந்தித்து விட்டது என்றால், திருக்குர்ஆன் யாருடைய வேதமோ அந்த ஈடு இணையற்ற ஓரிறைவனின் வஹியே இது என்று நான் ஒப்புக் கொண்டு விட்டேன். இந்த இடத்தில் தவ்ராத் மற்றும் இஞ்சீலுடைய பெயர்களை நான் எடுத்துரைக்க மாட்டேன். ஏனென்றால் தவ்ராத்தும் இஞ்சீலும் எழுத்தாளர்களின் கைகளால் எந்த அளவு எழுதப்பட்டு, மாற்றப்பட்டு விட்டதென்றால் இப்போது அவற்றை இறை வேதம் என்று கூற முடியாது.

சுருக்கமாக, என் மீது இறங்கிய இறைவனின் வஹீ எந்த அளவு நம்பிக்கைக்குரியதாகவும், உறுதியானதாகவும் இருக்கிறதென்றால், அவற்றின் மூலமாக நான் எனது இறைவனை அடைந்தேன். வானத்தின் அடையாளங்களின் மூலமாக அந்த வஹீ ஹக்குல் யகீன் – அனுபவ அறிவு எனும் அந்தஸ்தை மட்டும் கொண்டு சேர்க்கவில்லை. மாறாக, அவற்றின் ஒவ்வொரு பகுதியும் இறை வேதமாகிய திருக்குர்ஆன் எடுத்துக் கூறுவதற்கேற்ப அமைந்துள்ளது. மேலும் இதை உண்மைப்படுத்த மழையைப் போன்று வானத்திலிருந்து அடையாளங்கள் கொட்டின. அந்நாட்களில் தான்

ரமலான் மாதத்தில் சூரிய, சந்திர கிரகணங்கள் நிகழ்ந்தன. மஹ்தியின் காலத்தில் ரமலான் மாதத்தில் சூரிய, சந்திர கிரகணம் நிகழும் என்று எழுதப்பட்டுள்ளது. மேலும் அந்நாட்களில்தான் பஞ்சாபில் பெருமளவில் பிளேக்கும் பரவியது. திருக்குர்ஆனில் இச்செய்தி உள்ளது. அந்த நாட்களில் பெரும் மரணங்கள் நிகழும் என முந்தைய நபிமார்களும் தகவல் வழங்கியுள்ளார்கள். எந்த கிராமமும், நகரமும் இந்த மரணத்திலிருந்து தப்பிக்காது என்று கூறப்பட்டுள்ளது. ஆகவே அவ்வாறு தான் நடந்தது; நடந்து கொண்டிருக்கிறது. இந்த நாட்டில் பிளேக்கின் பெயரும் அடையாளமும் கூட இல்லாதிருந்தது. அப்போது ஏறக்குறைய 22 வருடங்களுக்கு முன்பு பிளேக் பரவும் என்று அது தோன்றுவதைக் குறித்து இறைவன் எனக்கு செய்தி அறிவித்திருந்தான்.

(தஸ்கிரத்துஷ் ஷஹாததைன், ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 3,4)

மேலும் தம்முடைய வாதம் குறித்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் குறித்த நேரத்தில் தோன்றியவனாவேன். திருக்குர்ஆன், ஹதீஸ், இஞ்ஜீல் மற்றும் ஏனைய நபிமார்களின் முன்னறிவிப்புக்கிணங்க எனக்காக வானத்தில் ரமலான் மாதத்தில் சூரிய, சந்திர கிரகணங்கள் ஏற்பட்டன. மேலும் என்னுடைய காலத்தில் அனைத்து நபிமார்களின் செய்திகள் மற்றும் திருக்குர்ஆனின் செய்திகளுக்கிணங்க இந்த நாட்டில் வழக்கத்திற்கு மாறாக பிளேக் பரவியது. மேலும் சஹீஹான ஹதீஸுகளுக்கேற்ப நான் இக்காலத்தில் ஹஜ்ஜிலிருந்து தடுக்கப்பட்டுள்ளேன். மர்யமின் மகன் மஸீஹின் காலத்தில் வெளிப்பட்ட நட்சத்திரம் என்னுடைய காலத்திலும் வெளிப்பட்டுள்ளது. மேலும் எனது காலத்தில் இந்த நாட்டில் ரயில் ஓடத் தொடங்கி ஒட்டகங்கள் பயனற்றவையாக ஆக்கப்பட்டு விட்டன. மக்கா மற்றும் மதீனாவுக்கு இடையிலும் ரயில் ஓடத் தொடங்கி அந்த அனைத்து ஒட்டகங்களும் பயன்று போகும் காலம் அருகில் வந்து விட்டது. மாறாக அது நெருங்கி விட்டது. முதலில் சாலைகளின் மூலமாக தொடர்பு ஏற்பட்டிருந்தது. இப்போதும் அங்கும் ரயில்களின் மூலமாக தொடர்பு ஏற்பட்டு விட்டது.

13 நூற்றாண்டுகளாக பயணத்தை வாழ்த்துக்குரியதாக ஆக்கி வந்த அந்த அனைத்து ஒட்டகங்களும் இப்போது பயனற்றதாகி விடும். அப்போது சஹீஹ் முஸ்லிமில் ஒட்டகங்களைக் குறித்து கூறப்பட்ட ஹதீஸ் பொருந்தி விடும்.

لَيُتْرَكَنَّ الْقِلَاصُ فَلَا يُسْعٰى عَلَيْهَا அதாவது மஸீஹின் காலத்தில் ஒட்டகங்கள் பயனற்றதாக ஆகி விடும். எவரும் அவற்றின் மீது பயணம் செய்ய மாட்டார்.

என்னுடைய கைகளின் மூலம் ஆயிரக்கணக்கான அடையாளங்கள் வெளிப்பட்டன. அடையாளங்களை வெளிப்படுத்துவதில் என்னுடன் போட்டியிட்டு என்னை மிகைக்க பூமியில் ஏதேனும் மனிதன் உயிருடன் உள்ளானா என்ன? எந்த இறைவனுடைய கையில் எனது உயிர் உள்ளதோ அவன் மீது ஆணையாக! என் கைகளில் இப்போது வரை இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான அடையாளங்கள் வெளிப்பட்டு விட்டன. மேலும் ஏறக்குறைய பத்தாயிரத்திற்கு நெருக்கமான மக்களோ அல்லது அதை விட அதிகமானவர்களோ தூதராகிய முஹம்மது (ஸல்) அவர்களை கனவில் கண்டுள்ளனர். மேலும் அன்னார் என்னை உண்மைப்படுத்தியுள்ளார்கள். இந்த நாட்டில் 3 இலட்சம், 4 இலட்சம் சீடர்களைக் கொண்ட, கஷ்ஃப் காணக்கூடிய பிரபல்யமானவர்களுக்கு, இம்மனிதர் இறைவன் புறமிருந்து வந்துள்ளார் என கனவில் காட்டப்பட்டுள்ளது. அவர்களில் சிலர் எனது வருகைக்கு 30 வருடங்களுக்கு முன்பே உலகை விட்டு சென்று விட்டனர்.

உதாரணமாக, குலாப் ஷா என்ற பெயருடைய சான்றோர் ஒருவர் இருந்தார். அவர் லூதியானா மாவட்டைச் சேர்ந்தவர் ஆவார். அவர் ஜமால்பூர்–ஐ சேர்ந்த மர்ஹூம் மியான் கரீம் பக்ஷ் அவர்களிடம் ஈஸா காதியானில் பிறப்பார்; அவர் லூதியானாவுக்கு வருவார் என்று செய்தி அறிவித்துள்ளார்கள். மியான் கரீம் பக்ஷ் என்பவர் நல்ல, இறை பக்தியுள்ள ஒரு வயோதிக நபராக இருந்தார். அவர் என்னை லூதியானாவில் சந்தித்தார். மேலும் இந்த அனைத்து முன்னறிவிப்புகளையும் எனக்குக் கூறினார். எனவே மவ்லவிமார்கள் அவருக்கு பெரும் துன்பம் கொடுத்தனர். ஆனால் அவர் அதனை பொருட்படுத்தவில்லை. குலாப் ஷா அவர்கள் என்னிடம், மர்யமின் மகன் ஈஸா உயிருடன் இல்லை அவர் மரணித்து விட்டார். அவர் உலகிற்கு திரும்ப வர மாட்டார். இந்த சமுதாயத்திற்கு மிர்ஸா குலாம் அஹ்மது அவர்கள் ஈஸா ஆவார்கள். அவரை இறைவனின் ஆற்றலும், ஞானமும் முந்தைய ஈஸாவுடன் ஒப்புமை செய்துள்ளது. வானத்தில் அவருடைய பெயர் ஈஸா என்று சூட்டப்பட்டுள்ளது என்று கூறியதாக அவர் என்னிடம் தெரிவித்தார்.

அவர் தனது சீடரைப் பார்த்து, கரீம் பக்ஷே! அந்த ஈஸா தோன்றும்போது மவ்லவிகள் எந்த அளவுக்கு எதிர்ப்பார்கள் என்பதை நீர் காண்பீர். அவர்கள் கடுமையாக எதிர்ப்பார்கள். ஆனாலும் அவர்கள் வெற்றியடைய மாட்டார்கள். இன்று வரை அவர்கள் வெற்றி பெறாமல்தான் உள்ளனர். திருக்குர்ஆனின் மீது இயற்றப்பட்ட பொய்யான அடிக்குறிப்புகளை நீக்குவதற்காக அவர் உலகில் தோன்றுவார். திருக்குர்ஆனின் உண்மையான முகத்தை காட்டுவதற்காக தோன்றுவார்.

இந்த முன்னறிவிப்பில் அந்த சான்றோர், அந்த ஈஸாவை நீர் காணும் வகையில் வாழ்வைப் பெறுவீர்கள் என தெளிவாக சுட்டிக்காட்டி விட்டார்கள்.

(தஸ்கிரத்துஷ் ஷஹாததைன், ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 35–37)

அதாவது தமது சீடரின் வயதைக் குறித்தும் அந்த முன்னறிவிப்பு இருந்தது.

பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: நினைவிற் கொள்ளுங்கள்! இறைவனுடைய பெயர் கபூர் – மிக்க மன்னிப்பவன் ஆகும். அவ்வாறிருக்கும்போது (பாவமன்னிப்புக் கோரி) திரும்புபவர்களை அவன் மன்னிக்காமல் இருப்பானா என்ன? இதுபோன்ற பிழைகள் சமுதாயத்தில் தோன்றி விட்டன. இந்த பிழைகளில் ஒன்றுதான் ஜிஹாது குறித்த பிழையாகும். ஜிஹாது ஹராம் ஆகும் என்று நான் கூறினால் மட்டும் கண்களை உருட்டி பார்க்கிறார்கள். கொலை செய்யும் மஹ்தியைக் குறித்த ஹதீஸுகள் சந்தேகத்திற்கிடமானவை என்று அவர்களே ஒப்புக் கொள்வதைக் காணும்போது வியப்பாக உள்ளது.

மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி இந்த தலைப்பில் நூல்களை எழுதியுள்ளார். அந்த ஹதீஸுகள் சந்தேகத்திற்கிடமானவை என்று ஒப்புக் கொண்டுள்ளார். மேலும் இந்த கோட்பாட்டைத்தான் மியான் நஸீர் ஹுஸைன் தெஹ்லவி அவர்களும் கொண்டுள்ளார். தற்போதும் சில ஆலிம்கள் இக்கருத்தை கூற ஆரம்பித்து விட்டனர். அந்த ஹதீஸுகளை முற்றிலும் சரியானதாக அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. அவ்வாறிருக்கும்போது என்னை பொய்யன் என்று அழைக்கிறார்கள்?

உண்மையான விஷயம் என்னவென்றால், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியுடைய வேலை என்னவென்றால், அவர் சண்டைகளின் தொடரை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்பதே. எழுதுகோல், துஆ மற்றும் சிந்தனையின் மூலமாக இஸ்லாத்தின் புகழை ஓங்கச் செய்வார்.

ஆகவே இந்த எழுதுகோல் துஆ மற்றும் சிந்தனை ஆகிய இவை தான் இன்றும் அன்னாரை ஏற்றுக் கொள்பவர்களின் பணியாக இருக்கிறது.

அன்னார் கூறுகின்றார்கள்: மக்களுக்கு இவ்விஷயம் புரியவில்லை என்பதில் பரிதாபமே! ஏனென்றால் உலகின் பக்கம் எந்த அளவுக்கு கவனம் உள்ளதோ அந்த அளவுக்கு மார்க்கத்தின் பக்கம் இல்லை.

ஏற்றுக் கொண்ட பிறகு நமது கவனம் மீண்டும் உலகின் பக்கம் மிக அதிகமாக சாய்ந்து விட்டதா? என நாமும் நமது நிலைகளை ஆய்வு செய்து பார்க்க வேண்டும்.

அன்னார் கூறுகின்றார்கள்: உலகின் அழுக்குகள் மற்றும் அசுத்தங்களில் மூழ்கிய பிறகு அவர்களின் மீது திருக்குர்ஆனின் ஞானங்கள் திறக்கப்பட வேண்டும் என எதிர்பார்ப்பது எவ்வாறு சாத்தியமாகும்?

لَا يَمَسُّهٗٓ اِلَّا الْمُطَهَّرُوْنَ என அங்கு தெளிவாக எழுதப்பட்டுள்ளது. நான் அனுப்பி வைக்கப்பட்டதன் குறிக்கோள் என்ன? என்பதையும் கேளுங்கள்! நான் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதன் அடிப்படை நோக்கம் என்ன? எனது வருகையின் நோக்கம் மற்றும் குறிக்கோள், இஸ்லாத்தை புதுப்பிப்பதும், இஸ்லாத்திற்கு ஆதரவளிப்பது மட்டுமேயாகும். ஒரு புதிய ஷரீஅத்தை கற்றுக் கொடுப்பதற்காகவோ அல்லது புதிய கட்டளைகளை

கொடுப்பதற்காகவோ அல்லது ஏதேனும் புதிய வேதம் இறங்கும் என்பதற்காகவோ நான் வந்துள்ளேன் என கருதி விட வேண்டாம். அவ்வாறு ஒருபோதும் அன்று! இவ்வாறு ஒருவர் கருதுவார் என்றால் என்னைப் பொருத்தவரை அவர் கடும் வழிகேடரும், மார்க்கமற்றவரும் ஆவார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீது ஷரீஅத் மற்றும் நுபுவ்வத் முடிவு பெற்று விட்டது. இப்போது வேறு எந்த ஷரீஅத்தும் வர இயலாது. திருக்குர்ஆன் காத்தமுல் குதுப் ஆகும். இப்போது அதில் ஏதேனும் எழுத்தையோ, புள்ளியையோ அதிகரிக்கவோ, குறைக்கவோ இடமில்லை. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருள்கள், நன்மைகள் மற்றும் திருக்குர்ஆனின் போதனை மற்றும் நேர்வழிகளின் கனிகள் முடிவு பெற்றுவிடவில்லை என்பது உண்மையே!

அவை ஒவ்வொரு காலத்திலும் புத்தம் புதிதாக உள்ளன. மேலும் அந்த நன்மைகள் மற்றும் அருள்களின் சான்றுக்காகவே இறைவன் என்னை எழுப்பியுள்ளான். இஸ்லாத்தின் தற்போதைய நிலை மறைவாக இல்லை. முஸ்லிம்கள் எல்லா வித பலவீனங்கள் மற்றும் வீழ்ச்சிக்கு இரையாக்கப்படுகிறார்கள் என்பது ஒருமித்த ஏற்றுக் கொள்ளப்பட்ட விஷயமாகும். எல்லா விதத்திலும் அவர்கள் வீழ்கிறார்கள். (தற்காலத்தில் இன்னும் மோசமான நிலையை நாம் கண்டு வருகிறோம்.) அவர்களின் நாவு ஒன்றாக உள்ளதென்றால் உள்ளங்கள் ஒன்றாக இல்லை. மேலும் இஸ்லாம் அநாதையாகி விட்டது. இவ்வாறான நிலையில், அதற்கு ஆதரவு அளித்து, கண்காணிக்கும் பொருட்டு இறைவன் என்னை அனுப்பினான். மேலும் அவன் தனது வாக்குறுதிக்கேற்ப அனுப்பினான்.

ஏனென்றால் اِنَّا نَحۡنُ نَزَّلۡنَا الذِّکۡرَ وَ اِنَّا لَہٗ لَحٰفِظُوۡنَ என இறைவன் கூறியுள்ளான். தற்போது ஆதரவு, உதவி மற்றும் பாதுகாப்பை மேற்கொள்ளவில்லை என்றால் இதை செய்ய எந்த காலம் வரும்? பத்ரின்போது ஏற்பட்ட அதே நிலைமைதான் இப்போது 14 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டுள்ளது.

அதைக் குறித்து அல்லாஹ் وَ لَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّ اَنۡتُمۡ اَذِلَّۃٌ என்று கூறியுள்ளான்.

இந்த வசனத்திலும் ஒரு முன்னறிவிப்பு பொதிந்துள்ளது. அதாவது 14 ஆம் நூற்றாண்டில் இஸ்லாம் பலவீனமாகவும், சக்தியற்றதாகவும் ஆகிவிடும்போது இறைவன் இந்த பாதுகாப்பு வாக்குறுதிக்கேற்ப அதற்கு உதவி செய்வான். அவன் இஸ்லாத்திற்கு உதவி செய்ததைக் கண்டு நீங்கள் ஏன் வியப்படைகிறீர்கள்?

பிறகு தமக்கெதிராக எதிர்ப்பாளர்கள் மேற்கொள்ளும் ஆணவமான நடவடிக்கை குறித்து எடுத்துரைத்தவாறு அன்னார் கூறுகிறார்கள்: எனது பெயர் தஜ்ஜால் என்றும், பெரும் பொய்யன் என்றும் வைக்கப்படுகிறது. என் மீது அவதூறுகள் சுமத்தப்படுகின்றன. இதைக் கண்டு எனக்கு வருத்தமில்லை. ஏனென்றால், எனக்கு முன்னுள்ள தூதர்கள் எவ்வாறு நடத்தப்பட்டார்களோ அவ்வாறே என்னுடனும் நடந்து கொள்வது அவசியமாகும். நானும் அந்த தொன்மையான நடைமுறையில் பங்கு பெறுவது அவசியமாகும்.

நமது எஜமானரும், தலைவருமான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிப்பாதையில் வந்த சோதனைகளிலும், கஷ்டங்களிலும் சிறிதளவு கூட என் மீது ஏற்படவில்லை. நபிமார்களின் தொடரில் இதற்கு நிகரான ஒன்றை எவரிடத்திலும் நாம் காண முடியாது. பெருமானார் (ஸல்) அவர்கள் இஸ்லாத்திற்காக சகித்துக் கொண்ட துன்பங்களை எழுதுவதற்கு எழுதுகோலுக்கு சாத்தியமில்லை. அதை எடுத்துரைப்பதற்கு நாவுக்கு வலுவில்லை. இவற்றிலிருந்தே அன்னார் எத்தகைய கம்பீரமிக்க, மன திடமுள்ள நபியாக இருக்கிறார் என்பது புலனாகிறது. இறைவனுடைய ஆதரவும், உதவியும் அன்னாருடன் இல்லாதிருந்தால், இந்த துயரங்களின் மலையை சுமப்பது சாத்தியமாகி இருக்காது. வேறு ஏதாவது ஒரு நபி சந்தித்திருந்தால் அவராலும் சாத்தியமாகி இருக்காது. ஆனால் எந்த இஸ்லாத்தை இவ்வாறான துன்பங்கள் மற்றும் துயரங்களுடன் அன்னார் பரப்பினார்களோ இன்று அதன் நிலையை நான் எடுத்துரைக்க வேண்டுமா என்ன?

(லெக்சர் லூதியானா, ரூஹானீ கஸாயீன் தொகுதி 20 பக்கம் 279,280)

முஸ்லிம்கள் இஸ்லாத்தின் நிலையை எவ்வாறு ஆக்கி விட்டார்கள்? மார்க்கத்தை புதுப்பிப்பதற்காக வந்த நபரை ஏற்றுக் கொள்வதற்கு அவர்கள் ஆயத்தமாக இல்லை.

பிறகு அன்னார் கூறுகிறார்கள்: இஸ்லாத்தை வெற்றிகரமானதாக ஆக்குகின்ற மற்றும் பிற மார்க்கங்களின் மீது மிகைக்கச் செய்யும் வழிமுறையை எனது எழுத்துக்களின் மூலமாக நான் முழுமையாக எடுத்து வைத்து விட்டேன். எனது பத்திரிகைகள் அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவுக்குச் செல்கின்றன. இறைவன் அந்த சமுதாயத்திற்கு புரியும் திறனை வழங்கியுள்ளான். அவர்கள் இறைவன் வழங்கிய அறிவைக் கொண்டு இவ்விஷயத்தை புரிந்து கொண்டனர். ஆனால் இதை ஒரு முஸ்லிமுக்கு முன்னால் நான் எடுத்து வைக்கும்போது பைத்தியக்காரரைப் போன்றோ, அல்லது கொலை செய்ய விரும்புபவரைப் போன்றோ அவரது வாயில் நுரை தள்ளுகிறது. (தற்காலத்தில் அஹ்மதிகளுடன் இவர்கள் இவ்வாறுதான் நடந்து கொள்கின்றனர்.)

ஆனால் திருக்குர்ஆனுடைய போதனை اِدۡفَعۡ بِالَّتِیۡ ہِیَ اَحۡسَنُ (அழகியவற்றால் தீமையை எதிர்ப்பீராக) என்பதாகும். எதிரியாக இருந்தாலும் மென்மை மற்றும் நன்னடத்தையின் மூலமாக நண்பனாக ஆகி விடலாம் என்பதற்காக இப்போதனை உள்ளது. இவ்விஷயங்களை அமைதியாக, நிம்மதியுடன் கேளுங்கள். கம்பீரமும் கண்ணியமுமிக்க அல்லாஹ்வின் மீது ஆணையிட்டு நான் கூறுகிறேன்! நான் அவன் புறமிருந்தே வந்துள்ளேன். நான் இட்டுக்கட்டுபவன் அல்லன் என்றும், பொய்யன் அல்லன் என்றும் அவன் நன்கறிவான். இறைவன் மீது நான் ஆணையிட்டு கூறிய பிறகும், எனக்கு ஆதரவாக அவன் வெளிப்படுத்திய அடையாளங்களைக் கண்ட பிறகும் நீங்கள் என்னை பெரும் பொய்யன் என்றும், இட்டுக்கட்டுபவன் என்றும் கூறினால், பிறகு இறைவன் மீது ஆணையிட்டு நான் உங்களிடம் கூறிக் கொள்கிறேன்! தினந்தோறும் அல்லாஹ்வின் மீது பொய்யும் புரட்டும் செய்த பிறகும் அல்லாஹ் அவனுக்கு உதவி ஒத்தாசை செய்து வருவதாக ஏதேனும் ஒரு பொய்யனின் உதாரணத்தை நீங்கள் எடுத்துக் காட்டுங்கள். அல்லாஹ்வின் மீது ஒரு பொய்யர் இட்டுக்கட்டுகிறார். பொய் கூறுகிறார். ஆயினும் அல்லாஹ் அவருக்கு உதவிகளும் புரிந்து வருகிறான். இவ்வாறான ஒரு பொய்யரை காட்டுங்கள்.

(இறை உதவிகள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் உள்ளது என்பதற்கு இன்று உலகம் முழுவதும் பரவியுள்ள அஹ்மதிய்யா ஜமாஅத் தெளிவான சான்றாக இல்லையா என்ன?)

அன்னார் கூறுகிறார்கள்: அவரை இறைவன் அழித்திருக்க வேண்டும். இவ்வாறான பொய்யரை அல்லாஹ் நாசமாக்கியிருக்க வேண்டும். ஆனால் இங்கோ இதற்கு மாற்றமாக விவகாரம் உள்ளது. நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். நான் உண்மையாளன் ஆவேன். நான் அவன் புறமிருந்து வந்துள்ளேன். ஆனால் பெரும் பொய்யன் என்றும், இட்டுக்கட்டுபவன் என்றும் நான் அழைக்கப்படுகிறேன். சமுதாயம் எனக்கெதிராக ஏற்படுத்தும் ஒவ்வொரு வழக்கிலும், ஒவ்வொரு சோதனையிலும் அல்லாஹ்வே எனக்கு உதவி புரிகிறான்.

மேலும் அவற்றிலிருந்து அவன் என்னை காப்பாற்றுகிறான். இலட்சக்கணக்கான மனிதர்களின் உள்ளங்களில் எனது நேசத்தை இட்டு எனக்கு அவன் உதவி புரிந்துள்ளான். நெடுந்தொலைவிலும், வெகு அருகிலும் – தற்போது ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும், ஆப்ரிக்காவிலும், தென் அமெரிக்காவிலும், தீவுகளிலும், ஆஸ்திரேலியாவிலும், அரபு நாடுகளிலும் இலட்சக்கணக்கானவர்களின் உள்ளங்களில் எனது நேசத்தை ஏற்படுத்தி விட்டான்.

ஒரு பொய்யருடன் இவ்வாறு நடந்து கொள்ளப்படுவது வினோதமாக உள்ளது. எனது உண்மைக்கு சான்றாக இதை நான் வரையறுக்கிறேன்.

## நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

இதுவே எனது உண்மைக்கு சான்றாகும். ஒருவர் பெரும் பொய்யராக இருந்தார். அல்லாஹ் மீது அவர் இட்டுக்கட்டினார். ஆயினும் அல்லாஹ் அவருக்கு இந்த அளவு உதவிகள் புரிந்து, இத்தனை நீண்ட காலம் அவரை உயிருடன் வைத்தான். அவருடைய நோக்கங்களை பூர்த்தி செய்தான் என்று ஏதேனும் ஒரு இட்டுக்கட்டுபவரின் அடையாளத்தை நீங்கள் காட்டுங்கள் பார்க்கலாம்?

(லெக்சர் லூதியானா, ரூஹானீ கஸாயீன் தொகுதி 20 பக்கம் 275,276)

பிறகு அன்னார் கூறுகிறார்கள்: தற்போது வானத்திலிருந்து இறங்கிக் கொண்டிருக்கும் ஒளிகளையும், அருள்களையும் முஸ்லிம்கள் மதிக்க வேண்டும். தகுந்த நேரத்தில் அவர்களுக்கு கை கொடுக்கப்பட்டதற்காகவும், இறைவன் தனது வாக்குறுதிக்கேற்ப இந்த துயரத்தின்போது அவர்களுக்கு உதவி புரிந்ததற்காகவும் அவர்கள் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டும். ஆனால் அல்லாஹ்வின் இந்த அருளை மதிக்கவில்லை என்றால் இறைவன் அவர்களை பொருட்படுத்த மாட்டான். அவன் தனது வேலையை செய்தே தீருவான். ஆனால் அவர்கள் பரிதாபத்திற்குரியவர்களாக ஆகி விடுவார்கள். நான் மிக வலுவுடனும், முழு நம்பிக்கை மற்றும் அகப்பார்வையுடனும் கூறுகிறேன். பிற மார்க்கங்களை அழித்து, இஸ்லாத்தை மிகைக்கச் செய்து, ஆற்றல் வழங்க அல்லாஹ் நாடியுள்ளான். இறைவனின் இந்த நாட்டத்தை எதிர்க்க எந்த கையும் இல்லை; எந்த ஆற்றலும் இல்லை. அவன் فَعَّالٌ لِّمَا يُرِيْدُ – தான் நினைத்ததை நடத்துபவன் ஆவான்.

முஸ்லிம்களே நினைவிற் கொள்ளுங்கள்! அல்லாஹ் என் மூலமாக உங்களுக்கு இந்த செய்தியை கூறுகிறான். நான் இந்தச் செய்தியை எட்ட வைத்து விட்டேன். இப்போது இதைக் கேட்பதும், கேட்காமலிருப்பதும் உங்கள் அதிகாரத்தில் உள்ளது. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மரணித்து விட்டார்கள் என்பது உண்மையாகும். வரக்கூடிய வாக்களிக்கப்பட்டவர் நான்தான் என்று நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். மேலும் இஸ்லாத்தின் வாழ்வு ஈஸாவின் மரணத்தில் தான் உள்ளது என்பதும் உறுதியான விஷயமாகும்.

(லெக்சர் லூதியானா, ரூஹானீ கஸாயீன் தொகுதி 20 பக்கம் 290)

பிறகு அன்னார் கூறுகிறார்கள்: என்னுடைய பேரிழந்த எதிரிகளை இறைவன் தினந்தோறும் பல விதமான, பல வகையான அடையாளங்களைக்காட்டி, இழிவிற்குள்ளாக்கி விடுகிறான். நான் அவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். எவ்வாறு ஒரு இப்ராஹீமுடன் கலந்துரையாடினானோ, சம்பாஷனை செய்தானோ, அதன் பிறகு இஸ்ஹாக்கிடமும், இஸ்மாயீலுடனும், யஃகூப்புடனும், யூசுஃப்–உடனும், மூஸாவுடனும், மர்யமின் மகன் மஸீஹுடனும், அனைவருக்கும் மேலாக நம்முடைய நபி (ஸல்) அவர்களுடனும் எந்த அளவுக்கு உரையாடினான் என்றால், அன்னாரின் மீது அனைவரையும் விடவும் பிரகாசமான, தூய வஹீயை இறக்கினான். அவ்வாறே அவன் தன்னுடன் உரையாடும், சம்பாஷனை செய்யும் நற்பேற்றை எனக்கும் வழங்கினான். இந்த நற்பேறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பின்பற்றியதன் காரணமாகவே எனக்கு கிடைத்தது.

நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமுதாயத்தைச் சேர்ந்தவனாக இல்லாமல் இருந்திருந்தால், மேலும் அன்னாரை பின்பற்றாமல் இருந்திருந்தால், உலகின் அனைத்து மலைகளுக்கும் நிகராக எனது நற்செயல்கள் இருந்திருந்தாலும் இறைவனுடன் உரையாடும், சம்பாஷணை செய்யும் இந்த நற்பேறு ஒருபோதும் எனக்கு கிடைத்திருக்காது. ஏனென்றால் இப்போது முஹம்மதிய்ய நபித்துவத்தைத் தவிர மற்ற அனைத்து நுபுவ்வத்துகளும் மூடப்பட்டு விட்டன. ஷரீஅத்தைக் கொண்ட எந்த நபியும் வர முடியாது. ஷரீஅத் அல்லாத நபி வர முடியும். ஆனால் அவர் உம்மத்தைச் சார்ந்தவராக முதலில் இருப்பது அவசியமாகும். ஆகவே இந்த அடிப்படையில் நான் உம்மத்தைச் சார்ந்தவனும் ஆவேன். நபியுமாவேன். இறைவனுடன் உரையாடும், சம்பாஷணை செய்யும் எனது நபித்துவம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நபித்துவத்தின் ஒரு நிழல் ஆகும். இதுவன்றி எனது நபித்துவம் ஒன்றுமில்லை.

என்னிடமிருந்து வெளிப்பட்டது முஹம்மதிய்ய நபித்துவமேயாகும். நான் நிழல் மட்டுமே ஆவேன். கண்ணியத்தில் எந்த பாதிப்பும் வந்து விடாது. (அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அந்தஸ்து எவ்விதத்திலும் பாதிக்கப்படாது). இறைவனுடன் நான் உரையாடுவது முற்றிலும் உண்மையே! ஒரு நொடியேனும் இதைக்குறித்து நான் சந்தேகம் கொண்டால் நான் காஃபிராகி விடுவேன். மேலும் எனது மறுமை நாசமாகி விடும். என் மீது இறங்கிய இறை வார்த்தைகள் முற்றிலும் நம்பிக்கைக்குரியதும், உறுதியானதும் ஆகும்.

சூரியனையும், அதன் பிரகாசத்தையும் கண்ட பிறகு இது சூரியன் ஆகும். இது அதனுடைய ஒளியாகும் என்று எவரும் சந்தேகிக்க முடியாததைப்போல், இறைவன் புறமிருந்து என் மீது இறங்குகின்ற அந்த சொற்களையும் நான் சந்தேகிக்க முடியாது. இறை வேதத்தின் மீது நம்பிக்கை கொள்வதைப்போன்றே நான் அவன் மீதும் நம்பிக்கை கொள்கிறேன்.

(தஜல்லியாத்தே இலாஹிய்யா, ரூஹானீ கஸாயீன் தொகுதி 20 பக்கம் 411,412)

பிறகு அன்னார் கூறுகிறார்கள்: இறைவன் மற்றும் அவனுடைய படைப்பினங்களுக்கு இடையிலான தொடர்பில் விரிசல் ஏற்பட்டு விட்டது. அதை அகற்றி விட்டு நேசம் மற்றும் பற்றின் தொடர்வை மீண்டும் நிலைநாட்ட வேண்டும் என்பதற்காகவே இறைவன் என்னை நியமித்தான். மேலும் உண்மையை வெளிப்படுத்தி மார்க்கப் போர்களை முடிவுக்கு கொண்டு வந்து, சமாதானத்திற்கான அடித்தளத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவும், உலகின் கண்களை விட்டு மறைந்து விட்ட மார்க்கத்தின் உண்மைகளை அவர்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்பதற்காகவும், பௌதீக இருள்களின் கீழ் அமுங்கிப் போன ஆன்மீகத்தை முன்னுதாரணத்துடன் எடுத்துக் காட்டுவதற்காகவும், மனிதனுக்குள் நுழைந்து – கவனம் மற்றும் சிந்தனையின் மூலமாக வளர்ச்சியடையும் இறை ஆற்றல்களை சொல்லால் மட்டுமல்லாமல் செயலால் அதன் நிலைகளை எடுத்துரைப்பதற்காகவும் (இறைவன் என்னை நியமித்தான்). மேலும் எவ்வித ஷிர்க்கின் கலப்படமும் கலக்காத, இப்போது காணமல் போன, கலப்பற்ற, ஒளிமிக்க தவ்ஹீதை மீண்டும் சமுதாயத்தில் ஊன்றுவது எனது வருகையின் மிகப்பெரும் நோக்கமாகும். இவை அனைத்தும் எனது ஆற்றல்களால் நடைபெறாது. மாறாக, வானம் மற்றும் பூமியின் இறைவனுடைய ஆற்றலினால் இது நடக்கும்.

ஒரு புறம் இறைவன் தமது கைகளால் எனக்கு பயிற்சி அளித்து, தமது வஹீயால் என் மீது நற்பேறு புரிந்து, இவ்வாறான சீர்திருத்தத்திற்காக நான் எழுந்து நிற்க வேண்டும் என எனது உள்ளத்திற்கு வேட்கையை வழங்கியுள்ளான். இன்னொரு புறம், அவன் இதற்காக உள்ளங்களை ஆயத்தப்படுத்தியதை நான் பார்க்கிறேன். எனது விஷயங்களை கேட்பதற்காக அவை ஆயத்தமாக உள்ளன. இறைவன் என்னை உலகில் அனுப்பிய காலம் முதல், உலகில் ஒரு பெரும் புரட்சி ஏற்படுவதை நான் காண்கிறேன். ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் ஹஸ்ரத் ஈஸாவின் இறைத்தன்மையை மிக அதிகமாக விரும்பியவர்களின் ஆராய்ச்சியாளர்கள் கூட இப்போது அவர்களாகவே இந்தக் கொள்கையை விட்டு விலகிச்


**திருக்குர்ஆனிலிருந்து...**

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad
(Naib Sec.Maal, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

பின்னர் நம்பிக்கை கொண்டு நற்செயல்களைச் செய்தவர்களுக்கு அவர்களின் நற்பலன்களை முழுமையாக வழங்குவதுடன் அவன் தனது அருளிலிருந்து அவர்களுக்கு மிகுதியாக வழங்குவான். (4:174)

Mohaideen Ali & M.Sabahul Islam
Melapalayam

செல்கிறார்கள். இப்போது எண்ணற்ற மக்கள் இந்தக் கொள்கைளை மறுக்கக் கூடியவர்களாக ஆகி விட்டனர். தலைமுறை தலைமுறையாக சிலைகளையும், தேவி தேவர்களையும் நேசித்து வந்தவர்களில் பெரும்பாலார், சிலைகள் ஒன்றுமற்றவை என புரிந்து கொண்டனர். இவர்கள் ஆன்மீகத்தைக் குறித்து அறியாதவர்களாக இருக்கலாம். சில சொற்களை மட்டும் சடங்கு சம்பிரதாய ரீதியில் தெரிந்தவர்களாக இருக்கலாம். ஆனால் ஆயிரக்கணக்கான வீணான சடங்குகளையும், பித்அத்துகளையும், ஷிர்க்கின் கயிறுகளையும் அவர்கள் தமது கழுத்திலிருந்து கழற்றி விட்டார்கள்.

மேலும் அவர்கள் தவ்ஹீதின் வாசலுக்கு அருகில் வந்து நின்று விட்டார்கள். சிறிது காலத்திற்குப் பிறகு இறை அருட்கள் அவர்களில் பெரும்பாலாரை தமது சிறப்பான கையினால் உண்மையான, முழுமையான தவ்ஹீதின் இந்த அமைதி இல்லத்திற்கு தள்ளிக் கொண்டு வந்து நுழைத்து விடும் என நான் நம்புகிறேன். இதனுடன் அவர்களுக்கு முழுமையான நேசமும், முழுமையான (இறை) அச்சமும், முழுமையான (இறை) ஞானமும் வழங்கப்படும். எனது இந்த நம்பிக்கை வெறும் சிந்தனையை அடிப்படையாகக் கொண்டதல்ல. மாறாக, இறைவனின் தூய வஹியினால் இந்த நற்செய்தி எனக்கு கிடைக்கப் பெற்றது. வெகு விரைவில் பல்வேறு சமுதாயங்களை ஒரே சமுதாயமாக ஆக்கி சாந்தி மற்றும் சமாதானத்தின் நாட்களை கொண்டு வருவதற்காக இந்த நாட்டில் இறைவனுடைய ஞானம் இவ்வாறு வினை புரிந்துள்ளது. பல்வேறு விதமான அனைத்து சமுதாயங்களும் ஒரு நாள் ஒரே சமுதாயமாக ஆகும். ஒவ்வொருவருக்கும் (மாறுதலுக்கான) அந்தக் காற்றறின் நறுமணம் வந்து கொண்டிருக்கிறது.

(லெக்சர் லூதியானா, ரூஹானீ கஸாயீன் தொகுதி 20 பக்கம் 180,181)

உலகில் வசிப்பவர்களில் – குறிப்பாக முஸ்லிம்கள் இந்த உண்மையை உணரக் கூடியவர்களாக ஆக வேண்டும். அன்னாருடைய வாதத்தை புரிந்து கொள்ளக்கூடியவர்களாக ஆக வேண்டும். மேலும் இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்காக அல்லாஹ் உலகிற்கு யாரை அனுப்பியுள்ளானோ அந்த மஸீஹ் மற்றும் மஹ்தியின் பைஅத்தில் விரைவில் வரக்கூடியவர்களாக அவர்கள் ஆக வேண்டும். அல்லாஹ் இவ்வாறு செய்வானாக. மேலும் பைஅத்தின் உரிமையை நிறைவேற்றக் கூடியவர்களாக நம்மையும் அல்லாஹ் ஆக்குவானாக.

பாகிஸ்தாஸ்தான் அஹ்மதிகளுக்காகவும், அல்ஜீரியாவின் அஹ்மதிகளுக்காகவும் துஆவுக்காக நான் மீண்டும் கூற விரும்புகிறேன். அங்கு பெரும்பாலான நிலைமை மீண்டும் சீர்குலைகிறது. அல்லது தலைகீழாக மாறிக் கொண்டே செல்கிறது. முழுமையான அமைதியும், நிம்மதியும் வந்து விட்டது என நாம் கூற முடியாது. நாள்தோறும் ஏதேனும் சம்பவங்கள் நிகழ்கின்றன. பாகிஸ்தானிலும், அல்ஜீரியாவிலும் சில அரசாங்கத்தினரின் எண்ணம் நல்லதாக இல்லை. மீண்டும் வழக்கை திறக்க விரும்புகின்றனர். பாகிஸ்தானிலும் சரி! அல்ஜீரியாவிலும் சரி! உலகின் ஒவ்வொரு நாட்டிலும் எங்கெல்லாம் ஏதேனும் ஓர் அஹ்மதி ஏதேனும் துன்பத்தில் இருப்பாரோ, அங்கெல்லாம் ஒவ்வொரு அஹ்மதியையும் அல்லாஹ் தனது பாதுகாப்பில் வைப்பானாக.

மேலும் இத்துடன் அஹ்மதிகளும் இவற்றின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அதாவது அஹ்மதிகள் முன்பை விட அதிகமாக இறைவன் பக்கம் குனிய வேண்டும். தமது இறைவணக்கங்களின் உரிமையை செலுத்தக் கூடியவர்களாக ஆக வேண்டும். மேலும் அடியார்களின் உரிமைகளையும் வழங்கக் கூடியவர்களாக ஆக வேண்டும். தமது நிலைமைகளை சிறந்ததாக ஆக்கக் கூடியவர்களாக ஆக வேண்டும். மேலும் இறைவனுடன் சிறப்பான தொடர்பை ஏற்படுத்துபவர்களாக ஆக வேண்டும். அல்லாஹ் நம் அனைவருக்கும் இதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக.

(தமிழில்: மவ்லவி APA தாரிக் அஹ்மது )

### திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad (Ameer, Melapalayam)

(கடைசி பக்கத்தின் தொடர்ச்சி...)

அதே ஜெர்மன் பேராசிரியர் அறிவிக்கின்றார்: சில இடங்களில் மக்கள் தங்களையும் அறியாமல் what a beautiful and true principle (என்ன ஓர் அழகான மற்றும் உண்மையான கொள்கை ஆகும்) என்று கூறினார்கள். தனது கருத்தை அவர் இந்த சொற்களில் வெளிப்படுத்திக் கொண்டிருந்தார். இந்த ஜெர்மானிய பேராசிரியர், அஹ்மதிகளுக்கு இந்த சந்தர்ப்பம் ஒரு திருப்புமுனை ஆகும். அதாவது முன்னேற்றத்திற்கான இடமாகும் என்று கூறினார். இது எப்படிப்பட்ட வெற்றி என்றால் நீங்கள் ஆயிரக்கணக்கான பவுண்டுகளை செலவிட்டிருந்தாலும் இதுபோன்ற விளம்பரமும், வெற்றியும் கிடைத்திருக்காது. இவை அனைத்தும் ஒரு சொற்பொழிவின் மூலம் கிடைத்திருக்கின்றது.

பஹாயி மார்க்கத்தின் ஒரு பெண்மணி சொற்பொழிவை கேட்டார். பின்னர் எங்களுடன் வீட்டிற்கு அருகில் வரை வந்தார். நான் பஹாயி எண்ணங்களைக் கொண்ட பெண்மணி ஆவேன். ஆனால் இன்றைய சொற்பொழிவை கேட்ட பிறகு எனது எண்ணங்கள் மாறி விட்டன. தங்களின் சொற்பொழிவுகளை நான் அதிகமாக கேட்க விரும்புகின்றேன். எப்போது மற்றும் எங்கெல்லாம் தங்களின் சொற்பொழிவு நிகழும் என்பதை எனக்கு தயவு செய்து கூறுங்கள். நான் நிச்சயம் வருவேன் என்று கூறினார்.

ஒரு பெண்மணி பின் தொடர்ந்து வந்து தனது வீட்டிற்கு தேநீர் அருந்த வருமாறு அழைப்பு கொடுத்தார். மற்றொரு சகோதரர் நாட்டுப்பற்றை விடவும் மிகவும் அன்பிற்குரிய கட்டுரையாகும் என்று கூறினார்.

(அல் ஃபஸல் 23 அக்டோபர் 1924, பக்கம் 4,5)

ஆக எவ்வாறிருப்பினும் சில துளிகளையே நான் எடுத்து வைத்துள்ளேன். அவை 18 வயதிலிருந்து 35 வயது வரையிலான அறிவு மற்றும் இறைஞானத்தின் முத்துக்களாகும். இளமைப் பருவத்தின் ஆரம்பம், பிறகு இளமைப் பருவம், பின்னர் அதன் தொடர்ச்சியாக இளமைப் பருவத்தில் ஆற்றிய சொற்பொழிவுகளாகும் இவை. இது எந்த நபரின் கூற்றுகள் என்றால் நான் கூறியதுபோன்று அந்த நபர் உலகியல் கல்வி எதையும் பெற்றிருக்கவில்லை. ஆனால் பௌதீக மற்றும் ஆன்மீக ஞானத்தால் அவர் நிரப்பப்பட்டிருந்தார். அவர் ஹஸ்ரத் வாக்களிகக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைத்துவத்திற்கு ஓர் அடையாளமாவார். நான் எடுத்து வைத்துள்ள விஷயங்கள் அனைத்தும் 17 ஆண்டு கால காலகட்டத்தில் அன்னார் கூறிய விஷயங்கள் ஆகும். கிலாஃபத்திற்கு முன்பு அன்னார் கூறிய சில விஷயங்களையும் நான் எடுத்து வைத்துள்ளேன். கிலாஃபத்திற்குப் பிறகு அன்னார் ஆற்றிய உரையையும் நான் எடுத்து வைத்துள்ளேன். இவை அனைத்தும் 17 ஆண்டு காலகட்டத்தில் அன்னார் ஆற்றிய சொற்பொழிவுகளாகும். அதில் 100ல் ஒரு பங்கை கூட என்னால் எடுத்துக்கூற முடியவில்லை என்றே கூற வேண்டும்.

புத்தகத்தின் அறிமுகத்தை எடுத்துக்கூறலாம் என்று எண்ணியிருந்தேன். இன்னும் குத்பாத்களும், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்களின் தஃப்ஸீர்களும் இருக்கின்றன. அதில் அறிவு மற்றும் ஞானத்தின் கருத்துக்கள் நிறைந்திருக்கின்றன. மேலும் அதில் அறிவு மற்றும் ஞானத்தின் நதிகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. பின்னர் பல்வேறு சபைகளில் அன்னார் உலகத்திற்கு வழிகாட்டியுள்ளார்கள். எனவே அந்த கருவூலத்தின் பெரும் பகுதி அச்சிடப்பட்டு விட்டது. ஜமாஅத் உறுப்பினர்கள் படிக்க வேண்டும். அல்லாஹ் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்களின் அந்தஸ்துகளை உயர்த்திக் கொண்டே இருப்பானாக.

பாகிஸ்தானின் நிலைமைகளுக்காகவும் துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் அங்குள்ள மக்களுக்கும் அமைதியுடனும், நிம்மதியுடனும் அமைதியான வாழ்க்கையை கழிப்பதற்கு நற்பாக்கியத்தை வழங்குவானாக. மேலும் எதிரிகளின் தாக்குதல்களையும், சதித்திட்டங்களையும் தனது அருட்களால் அழித்து விடுவானாக.

(தமிழில்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)

### திருக்குர்ஆனிலிருந்து...

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam (Qaid, Melapalayam)

# ஜுமுஆ பேருரை

**அவர் ஆன்மீக மற்றும் பௌதீக ஞானங்களால் நிரப்பப்படுவார் என்ற ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தொடர்பான முன்னறிவிப்பின் ஓர் அம்சம் தொடர்பாக அன்னாரின் எழுத்துக்கள் மற்றும் சொற்பொழிவுகளிலிருந்து சுருக்கமான நற்குறிப்பு**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 19 பிப்ரவரி 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **தப்லீக்** மாதம் **19 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ اَمْوَالَهُمْ بِالَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ اَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*

உலமாயே ஹிந்த் அமைப்பின் பிரபல்யமான தலைவர் மவ்லானா அப்துல் பாரி அவர்கள் 1920 ஆம் ஆண்டு மே மாதம் 30ம் தேதி தனது ஒரு கடிதம் மூலம் மாநாட்டில் தனது கருத்துக்களை எடுத்து வைக்குமாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுக்கு அழைப்பு விடுத்தார்கள். எனவே ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் துருக்கி ஒப்பந்தம் மற்றும் முஸ்லிம்களின் எதிர்கால நடவடிக்கைகள் என்ற தலைப்பில் ஒரே நாளில் அந்த கட்டுரையை எழுதினார்கள். மேலும் இரவோடு இரவாக அதை அச்சடித்து ஹஸ்ரத் மவ்லானா செய்யத் சர்வர் ஷா சாஹிப் மற்றும் ஹஸ்ரத் செய்யத் வலியுல்லாஹ் ஷா சாஹிப், ஹஸ்ரத் சவுத்ரி முஹம்மத் ஜஃபருல்லாஹ் சாஹிப் ஆகியோர் மூலம் அனுப்பி வைத்தார்கள்.

ஹுஸூர் அவர்கள் தனது அந்த கட்டுரையில் துருக்கி ஒப்பந்தத்தில் இடம் பெற்றிருந்த நிபந்தனைகளில் உள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டி அதன் தீய தாக்கங்களிலிருந்து தப்பிப்பதற்கு முஸ்லிம்களுக்கு முன்னால் சில ஆலோசனைகளையும் முன் வைத்தார்கள். ஹுஸூர் அவர்கள் மிகவும் ஆதாரப்பூர்வமான முறையில் தனது கருத்தை முன் வைத்தவாறு இந்த விஷயத்தை விளக்கி விட்டார்கள்: அதாவது ஹிஜ்ரத் செய்வதற்கும், பொதுவான ஜிஹாத் செய்வதற்கும், அரசாங்கத்துடன் தொடர்பை முறித்துக் கொள்வதற்கும் ஆலோசனைகள் முன் வைக்கப்படுகின்றன. இது செயல்படுத்தப்பட முடியாத ஒன்றாகும். மேலும் முஸ்லிம்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதாகும்.

முஸ்லிம்கள் ஒன்றுபட்ட குரலில் அதாவது அனைவரும் ஒன்றிணைந்து இந்த கருத்தை ஒன்றுபட்ட அரசாங்கங்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். அதாவது நாங்கள் முன் வைத்த சட்டங்களுக்கு எதிராக துருக்கியுடன் சமாதானத்திற்கான நிபந்தனைகளை நீங்கள் செய்துள்ளீர்கள். மேலும் இந்த ஒப்பந்தத்தில் கிருஸ்துவ காழ்ப்புணர்ச்சியும் வெளிப்படுகிறது. மேலும் இதன் நிபந்தனைகளில் முதலாளித்துவ சிந்தனைகளுக்கு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. எனவே முஸ்லிம்கள் இந்த தீர்ப்பை விரும்பவில்லை. அதை மாற்றுவதற்கு நாங்கள் கோரிக்கை வைக்கின்றோம். இந்த கட்டுரையில் ஹுஸூர் அவர்கள் மேற்குறிப்பிட்ட ஆலோசனை மட்டுமல்லாமல் இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களின் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சிக்காக தாமதமின்றி ஓர் உலகளாவிய இஸ்லாமிய லஜ்னா அமைப்பை அதாவது நம்பத்தகுந்த இஸ்லாமிய அறிஞரை நிலைநிறுத்துவதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும் என்று ஆலோசனை வழங்கினார்கள்.

(தஆருஃப் குதுப், அன்வாருல் உலூம் தொகுதி 5 பக்கம் 10)

இந்த கட்டுரையில் படம் பிடிக்கப்பட்டுள்ள காட்சிகள் இன்றும் கூட வெளிப்பட்டு வருகின்றன. அதாவது பொதுவாக சில மேற்கத்திய சக்திகள் முஸ்லிம் அரசாங்கங்களுடன் இதே நடைமுறையைத்தான் இன்றும் பின்பற்றி வருகின்றன. அந்த காலத்தில் இந்த இண்டர்நெட் போன்ற வசதிகள் எல்லாம் இல்லாமல் இருந்தது. அன்னாரின் அசாதாரணமான ஆலோசனை மற்றும் அன்னார் வழங்கிய ஆலோசனைகள் போன்றவை அன்னாருடன் அல்லாஹ்வின் சிறப்பான உதவியாக இருந்தது என்பதையே இது சுட்டிக் காட்டுகின்றது. அன்னாருக்கு அல்லாஹ் வழங்கியிருந்த உலக அறிவும் மேலும் அன்னாரின் புத்திக்கூர்மையும் அல்லாஹ் அவர்களிடம் கூறியிருந்த அந்த முன்னறிவிப்புகளையே சுட்டிக் காட்டுகின்றது.

அடுத்து அன்னாருடைய ஒரு சொற்பொழிவு உள்ளது. மலாயிகத்துல்லாஹ் என்பது அதன் தலைப்பாகும். அது 1920 ஆம் ஆண்டு டிசம்பர் 28ம் தேதி உரையாற்றப்பட்டதாகும். பைஅத்துன் நூர் பள்ளிவாசலில் இரண்டு நாட்கள் இந்த சொற்பொழிவை அன்னார் நிகழ்த்தினார்கள். அல்லாஹ்வின் வானவர்கள் என்ற இந்த கட்டுரை இஸ்லாத்தின் அடிப்படை விதிகள் மற்றும் ஈமானிய காரியங்களை உள்ளடக்கியது ஆகும். இந்த கட்டுரை மிகவும் நுட்பமானது மற்றும் ஆழமானது. இருந்தபோதிலும் ஹுஸூர் அவர்கள் அதனை மிகவும் எளிமையாகவும், அகப்பார்வை கொண்ட வடிவிலும் எடுத்துரைத்து விட்டார்கள். திருக்குர்ஆனின் அடிப்படையில் வானவர்களின் உண்மைத்துவம் மற்றும் தேவையும், அவர்களின் வகைகளும், அவர்களின் கடமைகளும் எடுத்துரைத்துள்ளார்கள் மேலும் அவர்களின் கடமைகளும் அவர்களது தொண்டுகள் மட்டுமின்றி வானவர்களின் இருப்பு தொடர்பான ஆதாரத்தையும், அது தொடர்பான சந்தேகம் மற்றும் ஆட்சேபனைகளுக்கு ஒரு விரிவான மற்றும் தெளிவான பதிலையும் வழங்கியுள்ளார்கள். கட்டுரையின் இறுதியில் ஹுஸூர் அவர்கள் வானவர்களுடன் தொடர்பை ஏற்படுத்துவதற்கும், அவர்களிடமிருந்து பயன் பெறுவதற்கும் எட்டு வழிமுறைகளையும் எடுத்துக் கூறியுள்ளார்கள்.

(தஆருஃப் குதுப், அன்வாருல் உலூம் தொகுதி 5 பக்கம் 15)

(1) எந்த மனிதர் மீது ஜிப்ரீல் (அலை) அவர்கள் இறங்கியுள்ளார்களோ அவருக்கு அருகில் அமர வேண்டும். அதாவது நல்லடியார்கள் மற்றும் நபிமார்களின் தோழமையில் இருக்க வேண்டும்.

(2) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓத வேண்டும்.

(3) மன்னிக்க வேண்டும். மேலும் தப்பெண்ணத்தை கைவிட வேண்டும் என்ற எண்ணம் மனிதனின் உள்ளத்தில் தோன்ற வேண்டும்.

(4) மனிதன் இறைவனின் தூய்மையை எடுத்தரைக்கவும், மேலும் அவனது புகழை பாடவும் வேண்டும்.

(5) திருக்குர்ஆனை சீர்தூக்கிப் பார்த்து ஓதி வர வேண்டும்.

(6) எந்த நபர்களுடன் வானவர்கள் இறங்குகின்றார்களோ அந்த நபர்கள் எழுதியுள்ள புத்தகங்களை படிக்க வேண்டும். இக்காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் புத்தகங்களை படிக்க வேண்டும்.

(7) எந்த இடங்களில் வானவர்கள் இறங்கியுள்ளார்களோ அங்கு செல்ல வேண்டும். சில இறை அடையாளங்கள் உள்ளன. இடங்கள் இருக்கின்றன. அங்கு செல்ல வேண்டும்.

(8) கலீஃபாவுடன் தொடர்பு இருக்க வேண்டும். இந்த அனைத்து விஷயங்களும் வானவர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்கு அவசியமாகும் என்று அன்னார் விரிவாக எடுத்துரைத்து விட்டார்கள்.

(மலாயிகத்துல்லாஹ், அன்வாருல் உலூம் தொகுதி 5 பக்கம் 556–561)

பின்னர் மார்க்கத்தின் தேவை என்ற தலைப்பில் அன்னார் ஒரு விரிவான சொற்பொழிவை நிகழ்த்தியுள்ளார்கள். 5 மார்ச் 1921 அன்று லாஹூர் கல்லூரியின் சில மாணவர்கள் சில கேள்விகளை கேட்டனர். அதற்கு அன்னார் பதிலளித்தார்கள். இதனுடைய விவரம் இவ்வாறாகும். சுருக்கமாக

4 மார்ச் 1921 அன்று ஒரு வழக்கில் சாட்சியம் வழங்குவதற்காக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் லாஹூர் வருகை தந்திருந்தார்கள். மார்ச் 4 முதல் 7 வரை அங்கு தங்கினார்கள். மார்ச் 5 அன்று காலேஜின் சில மாணவர்கள் ஹுஸூர் அவர்களை சந்தித்தனர். மேலும் அந்த சந்திப்பின்போது மூன்று கேள்விகள் கேட்டனர். முதல் கேள்வி, மார்க்கத்திற்கு எந்தத் தேவையும் இல்லை. அதனால் எந்த பயனும் இல்லை. ஆயினும் அதனை சில வெளிப்படையான நன்மைக்காக பயன்படுத்தினால் அதனால் தீங்கும் இல்லை. இரண்டாவது, மற்ற மார்க்கங்களிலும் அதுபோன்ற மக்கள் காணப்படுகின்றனர். அதாவது அவர்களும் முன்னறிவிப்பு செய்கின்றார்கள். அவ்வாறிருக்க இதில் இஸ்லாதிற்கு மட்டும் சிறப்பம்சம் என்ன இருக்கிறது? எனவே இஸ்லாத்தில் மட்டுமே முன்னறிவிப்புகள் செய்யப்படுகின்றன என்ற சிறப்பு இருக்க முடியாது. மூன்றாவதாக, ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் அவர்களின் ஜமாஅத் அதன் உண்மைத்துவத்திற்கு சான்றல்ல. ஏனென்றால் ரஷ்யாவில் லெனினுக்கும் பெரும் வெற்றி கிடைத்துள்ளது.

ஹுஸூர் அவர்கள் இந்த மூன்று கேள்விகளுக்கும் மிகவும் எளிய வழியில் ஆதாரப்பூர்வமாக பதிலளித்துள்ளார்கள். மார்க்கத்தின் தேவைக்கான கேள்வி என்பது இறை இருப்புடன் தொடர்புடையதாக உள்ளது. இறைவன் இருக்கின்றான் என்றால் மார்க்கத்தின் தேவையும் இருக்கின்றது. இறை இருப்பிற்கான சான்று தனது அடியாருடன் அவன் உரையாடுவதாகும். இக்காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் முன்னறிவிப்பு நிறைவேறிக் கொண்டிருக்கிறது. மேலும் இறை இருப்பிற்கான சான்றுகளை அது முன் வைத்துக் கொண்டிருக்கிறது.

இரண்டாவது கேள்விக்கான பதிலாக அன்னார் கூறினார்கள்: நபிமார்கள் மற்றும் ஏனைய மக்களின் முன்னறிவிப்புகளிலுள்ள அடிப்படை வித்தியாசம் என்னவென்றால், ஏனைய மக்கள் தங்களது அறிவின் அடிப்படையில் முன்னறிவிப்புகள் செய்கின்றனர். அது யூகம் என்ற நிறத்தைக் கொண்டதாக இருக்கிறது. ஆனால் நபிமார்களுக்கு இறைவன் புறமிருந்து முன்னறிவிப்பு வருகின்றது. அது எதிர்ப்பின் சூழலில் வருகின்றது. அதற்கு ஏராளமான அம்சங்கள் இருக்கின்றன. அதில் பொலிவும், அதிகாரமிக்க அம்சங்களும் அடங்கி இருக்கின்றன.

மூன்றாவது கேள்விக்கான பதிலாக அன்னார் கூறினார்கள்: ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் அவர்களுக்கு கிடைத்துள்ள வெற்றிகள் பற்றி ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் முன்னரே வாதம் செய்துள்ளார்கள். அதற்கேற்பவே முன்னேற்றம் அடைந்துள்ளது. எனவே மற்றவர்களுக்கும் முன்னேற்றம் கிடைக்கின்றது. அதனால் மிர்ஸா சாஹிபின் முன்னேற்றம் அன்னாரின் உண்மைத்துவத்திற்கு அடையாளம் அல்ல என்று கூறுவது சரியானதல்ல.

(தஆருஃப் குதுப், அன்வாருல் உலூம் தொகுதி 6 பக்கம் 1,2)

எவ்வாறிருப்பினும் இது ஒரு நீண்ட நெடிய கட்டுரையாகும்.

அடுத்து 1921ம் ஆண்டு இறை இருப்பை பற்றி அன்னார் ஒரு சொற்பொழிவை ஆற்றினார்கள். இதுவும் நீண்ட உரையாகும். 190 பக்கங்களைக் கொண்டதாகும். சுருக்கம் இவ்வாறாகும். இறை இருப்பு என்ற தலைப்பில் ஞானம் நிறைந்த, அகப்பார்வை நிறைந்த வடிவில் ஓர் அறிவார்ந்த சொற்பொழிவை 1921 ஆம் ஆண்டு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் நிகழ்த்தினார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள், தனது சொற்பொழிவில் இறை இருப்பிற்கான எட்டு சான்றுகளையும், அதில் செய்யப்படும் ஆட்சேபனைகளுக்கும் பதில் வழங்கியுள்ளார்கள். இறை பண்புகளிலிருந்து இறை இருப்பிற்கான சான்றுகளும் கிடைக்கின்றன என்று கூறி இறை பண்புகளின் வகைகளையும் அன்னார் விளக்கியுள்ளார்கள். அதற்கான சான்றுகளையும் அன்னார் முன் வைத்துள்ளார்கள். அல்லாஹ்வைப் பற்றிய ஐரோப்பியவாசிகளின் எண்ணங்கள், ஜொராஸ்டர் மார்க்கத்தினரின் எண்ணங்கள், ஹிந்துக்களின் எண்ணங்கள் மற்றும் ஆரியர்களின் சிந்தனைகளுக்கு எதிரில் இறைவன் தொடர்பாக இஸ்லாமிய போதனைகளை விளக்கத்துடன் எடுத்துரைத்துள்ளார்கள். அதுமட்டுமல்லாமல் ஹுஸூர் அவர்கள் தனது அந்த சொற்பொழிவில் இணை வைத்தலின் பொருளையும், அதன் வகைகளையும் எடுத்துரைத்தவாறு அவற்றை ரத்து செய்துள்ளார்கள். இறைவனைப் பார்த்தல் மற்றும் பார்த்தலின் படித்தரங்கள், அதன் பயன்கள் மற்றும் இறைவனை காண்பதற்குரிய வழிமுறைகள் ஆகியவற்றை எடுத்துரைத்துள்ளார்கள்.

(தஆருஃப் குதுப், அன்வாருல் உலூம் தொகுதி 6 பக்கம் 6)

பின்னர் இளவரசர் வேல்ஸுக்கு அன்பளிப்பு என்ற தலைப்பில் 1921ம் ஆண்டு அன்னார் ஒரு புத்தகத்தை எழுதினார்கள். இளவரசர் வேல்ஸ் அவர்களின் இந்திய வருகையின்போது அது முன் வைக்கப்பட்டது. அதன் சுருக்கம் இதுவாகும். பிரித்தானிய அரசாங்கத்தின் கவர்னர் வேல்ஸ் இளவரசர் 1921ம் ஆண்டு இந்தியா சுற்றுப் பயணத்திற்கு வருகை தந்திருந்தார்கள். பிற்காலத்தில் 8வது எட்வேர்டு என்று அழைக்கப்பட்ட அதே அரசர் இவர் ஆவார். 1936ம் ஆண்டு Church of England உடன் கருத்து வேறுபாடு கொண்டு பதவியை ராஜினாமா செய்து விட்டார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அன்னாரின் இந்திய வருகையின்போது இளவரசர் வேல்ஸ்க்கு அன்பளிப்பு என்ற பெயரில் புத்தகம் எழுதினார்கள். ஹுஸூர் அவர்களின் ஆலோசனைக்கேற்ப அஹ்மதிய்யா ஜமாஅத்தின் 35208 உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் 8 அனா கொடுத்து அந்த புத்தகத்தின் வெளியீட்டிற்கான பணியை செய்தார்கள். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் குழு ஒன்று லாஹூரில் 27 பிப்ரவரி 1922 அன்று பஞ்சாப் அரசாங்கத்தின் மூலமாக பிரின்ஸ் ஆஃப் வேல்ஸின் சமூகத்திற்கு ஒரு முகவரியில் இந்த இஸ்லாமிய புத்தகத்தை தன்னிகரற்ற அன்பளிப்பின் வடிவில் முன் வைத்தது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் மிகவும் அற்புதமான முறையில் ஆளும் அரசாங்கத்துடன் நன்றியுணர்வை வெளிப்படுத்துவது மட்டுமல்லாமல் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சுருக்கமான வாழ்க்கை மற்றும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் போதனை, வரலாறு மற்றும் அது நிலைநாட்டப்பட்டதன் நோக்கத்தை எடுத்துக் கூறியுள்ளார்கள். இறுதியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சுன்னத்தின்படி செயல்பட்டவாறு பிரித்தானிய அரசாங்கத்தின்கீழ் வாரிசுகள் வரை சென்றடைவதற்கும் போதனை நல்குமாறு வேண்டினார்கள். இஸ்லாத்தின் தூதுச் செய்தியை மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் எட்ட வைத்தார்கள். அவர்களுக்கு இஸ்லாத்திற்கு அழைப்பு விடுத்தார்கள். வேல்ஸ் அவர்கள் ஹுஸூர் அவர்களால் வழங்கப்பட்ட அன்பளிப்பை ஒப்புக் கொண்டார்கள். மேலும் சீஃப் செகரட்டரி மூலமாக அதற்கு நன்றியும் கூறினார்கள்.

(தஆருஃப் குதுப், அன்வாருல் உலூம் தொகுதி 6 பக்கம் 7)

இதன் பிறகு நல்ல தாக்கங்கள் ஏற்பட்டன. 1936ம் ஆண்டு 8வது எட்வர்டு என்று அழைக்கப்படக்கூடிய நபர் இங்கிலாந்து அரசர் ஆனார். நான் கூறியதுபோன்று கருத்து வேறுபாடுகளின் காரணமாக அன்னார் ராஜினாமா செய்து விட்டார்கள். அன்னார் அந்த அன்பளிப்பை மிகவும் கண்ணியத்துடனும், மரியாதையுடனும் பார்த்தார்கள். தனது சீஃப் செகரட்டரி மூலமாக மட்டும் நன்றி செலுத்தவில்லை. மாறாக, 1922 ஆம் ஆண்டு லாஹூரிலிருந்து ஜம்மு வரை பயணம் செய்தபோது அந்த புத்தகத்தை முழுமையாக படித்து முடித்தார்கள். மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். புத்தகத்தை படித்துக் கொண்டிருக்கும்போது சில இடங்களில் அன்னாரின் முகம் ரோஜா மலரைப் போன்று மலர்ந்திருந்ததாக பின்னர் கிடைத்த தகவல்களிலிருந்து தெரிய வருகின்றது. அதேபோன்று அன்னாரின் உதவியாளரும் கூறியிருக்கின்றார். அன்னார் புத்தகத்தை படித்துக் கொண்டிருக்கும்போது திடீரென எழுந்து நின்று விடுவார்கள். ஆக இதற்கு சிறிது காலம் பிறகு அன்னார் கிறிஸ்துவ மதத்திலிருந்து வெளியேறுவதாக அறிவித்து விட்டார்கள்.

துல்பிகார் என்ற பத்திரிகை 24 ஏப்ரல் 1922 அன்று இவ்வாறு எழுதியுள்ளது. அந்த புத்தகம் தொடர்பாக மதிப்புரையும் எழுதியுள்ளது. இஸ்லாத்தை பரப்புகின்ற பணியில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இரண்டாவது கலீஃபா அவர்களின் தைரியத்தை நம்மால் பாராட்டாமல் இருக்க முடியாது. வேல்ஸ் பரிசு என்ற புத்தகத்தின் பெரும் பகுதி இஸ்லாமிய தப்லீக்கால் நிரம்பியுள்ளது. ஒரு பெரும் சாதனையாகும். அதைப் பார்த்து அஹ்மதியல்லாதவர்கள் ஏக்கம் கொள்வார்கள். பத்திரிகை கட்டுரைகளின் மேஜைகளிலிருந்து காழ்ப்புணர்ச்சி எனும் மாலையை கழுத்திலிருந்து கழற்றி வைத்து விடுவது அவசியமாகும். அதன் காரணமாக அந்த பரிசைக் கண்டு வியந்து எழுந்து நிற்கின்றோம். இந்த அன்பளிப்பில் நூலாசிரியரான அறிஞர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சுன்னத்தின்படி முழுமையாக அமல் செய்துள்ளார். இஸ்லாத்தின் அழைப்பில் மிகவும் சுதந்திரமாகவும், தைரியத்துடனும் ஆங்கிலேய அரசாங்கத்தின் வாரிசுதாரர்களுக்கு எட்ட வைத்து விட்டார்கள்.

இரண்டாவது விஷயம் என்னவென்றால், இஸ்லாத்தின் ஏதாவதொரு பிரிவின் ஒரு நபர் அல்லது தற்போதைய காலத்தின் வெறுப்பை விரும்பும் ஏதாவதொரு பத்திரிகை இந்த அன்பளிப்பின் மீது ஆட்சேபனை செய்யக்கூடும். அந்த அன்பளிப்பில் தேவையற்ற பாராட்டுதல்கள் எங்கும் இடம் பெற்றிருப்பதாக எங்களுக்கு தெரியவில்லை. ஆயினும் சில இடங்கள் இருக்கின்றன. அதில் ஹஸ்ரத் மிர்ஸா சாஹிபின் ஆரம்பம் முதல் கடைசி காலகட்டத்தின் பகுதிகளை கண்டுள்ளேன். ஆனால் அந்த சம்பவங்கள் அமைதியின் விருப்பம் மற்றும் அரசாங்கத்தின் நன்றியுணர்வை வெளிப்படுத்தக் கூடியவை ஆகும். அமைதியற்ற, வன்முறையை விரும்பும் பிரிவை அல்லாஹ் ஒருபோதும் விரும்ப மாட்டான். மேலும் இறைவன் அதனை அழித்து நாசமாக்கி விடுவான்.

இதேபோன்று பஞ்சாபைச் சேர்ந்த நீம் சர்காரி பத்திரிகை சிவில் அண்ட் மிலிட்டரி கெஸிட் இவ்வாறு எழுதியுள்ளது. 18 ஏப்டர் 1922 அன்று தனது வெளியீட்டில் அது இவ்வாறு கூறுகிறது: இதை நாம் ஏற்றுக் கொண்டே தீர வேண்டும். மிகவும் தகுதியுடனும், ஞானத்துடனும் தனது சான்றுகளை மிக அழகிய வடிவில் முன் வைத்துள்ளார்கள். அதன் நோக்கம் தப்லீக் முயற்சியாகும். பிரின்ஸ் ஆஃப் வேல்ஸ் அஹ்மதியாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் இந்த புத்தகத்தின் முக்கியத்துவம் மற்றும் விலை மதிப்பில் எந்த சந்தேகமும் இல்லை. மார்க்கத்தில் ஹிந்துஸ்தான் மற்றும் பிரித்தானியாவின் பல்வேறு மார்க்கங்களில் ஆர்வம் காட்டி வரும் மக்களுக்கு இந்த புத்தகம் விருந்தாக அமையும்.

(தாரீகே அஹ்மதிய்யத் தொகுதி 4 பக்கம் 294)

வெளி உலகிலும் இந்த புத்தகம் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தும். மேற்கத்திய நாடுகளில் இந்த புத்தகம் இஸ்லாமிய பிரச்சாரத்திற்கு ஒரு புதிய வழியை திறந்து தந்து விட்டது. எனவே ஆஸ்திரேலியாவின் நகரமான வயானாவைச் சேர்ந்த ஒரு பேராசிரியர் அவர் மூன்று மொழிகளில் புலமைப் பெற்றவர் ஆவார். இதனைப் படித்து இந்த புத்தகத்தை படித்து மிகவும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார். வேதனை என்னவென்றால் அவருக்கு வயதாகி விட்டது. இல்லையென்றால் உலகம் முழுவதும் இதனை அவர் வெளியிட்டிருப்பார்.

ஹஸ்ரத் முஃப்தி முஹம்மத் சாதிக் சாஹிப் அவர்கள் அமெரிக்காவில் இருந்து இவ்வாறு எழுதினார்கள்: இந்தப் புத்தகம் அமெரிக்காவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இன்னும் கூறப்போனால், அமெரிக்கர்களின் அறிவார்ந்த தேட்டங்களுக்கேற்ப எழுதப்பட்டுள்ளதாகவே தெரிகின்றது. மேற்கத்திய நாடுகள் மட்டுமின்றி ஆஃப்ரிக்க நாடுகளிலும் அதன் தாக்கம் ஏற்பட்டது. எனவே நைரோபியின் பத்திரிகை தலைவர் இவ்வாறு எழுதியுள்ளார்: நான் கிருஸ்துவர் இல்லை என்றாலும் கிருஸ்துவ குடும்பத்தில் பிறந்தவன் ஆவேன். எனவே அவர்களின் புத்தகங்களை நன்கு புரிந்துள்ளேன். ஆனால் இந்த புத்தகத்திலிருந்து நான் பெற்றதையும், நான் அடைந்த இன்பத்தையும் என்னால் விவரிக்க முடியாது.

இந்த புத்தகத்தை எழுதக் கூடியவர் முஸ்லிமாக இருந்தாலும் அவர் கிறிஸ்துவர்களுக்கு மத்தியில் ஆண்டாண்டு காலம் இருந்துள்ளாரோ என்ற ஐயம் உள்ளது. மேலும் அவர்களது புத்தகங்களை மிகவும் சீர்தூக்கிப் படித்துள்ளார் என்பதும் தெரிய வருகின்றது. இல்லையென்றால், கிறிஸ்துவர்களுக்கு இதுபோன்ற ஆணித்தரமான விஷயங்களை எழுதுவதும், கூறுவதும் கடினமாகும். காழ்ப்புணர்ச்சியிலிருந்து முற்றிலும் விலகி மார்க்க அடிப்படைகளில் மட்டும் எழுதப்பட்ட இதுபோன்ற ஒரு புத்தகம் இதற்கு முன் என் பார்வையில் படவில்லை. இதுபோன்ற அழகில் இதுவே முதல் புத்தகமாகும். (தாரீகே அஹ்மதிய்யத் தொகுதி 4 பக்கம் 292–294)

அதேபோன்று 1924ம் ஆண்டு உண்மை இஸ்லாம் என்ற தலைப்பில் அன்னார் சொற்பொழிவாற்றினார்கள். புத்தகம் பெரியதாகும். அதன் சுருக்கம் அந்த கூட்டத்தில் வாசிக்கப்பட்டது. 250 பக்கங்களைக் கொண்டதாகும். 1924ம் ஆண்டு இந்த வாம்ப்லே கான்ஃபிரஸ் நடத்தப்பட்டது. உலகிலுள்ள அனைத்து மார்க்கங்களின் பெரும் அறிஞர்களுக்கு அழைப்பு கொடுக்கப்பட்டது. அவர்கள் தத்தமது மார்க்கத்தின் சிறப்புகள் பற்றி சொற்பொழிவாற்ற வேண்டும் என்றும் கூறப்பட்டது. அதில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுக்கும் அழைப்பு கொடுக்கப்பட்டது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அந்த மாநாட்டிற்காக அஹ்மதிய்யத் அதாவது உண்மை இஸ்லாம் என்ற பெயரில் மே 24 முதல் ஜூன் 6 வரை அதாவது இரண்டு வாரத்திற்கும் குறைவான காலத்தில் மிகவும் அற்புதமான நூலை எழுதினார்கள். பின்னர் அதன் சுருக்கத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் முன்னிலையில் ஹஸ்ரத் சவுத்ரி முஹம்மத் ஜஃபருல்லாஹ் கான் சாஹிப் அவர்கள் அந்த மாநாட்டில் வாசித்துக் காட்டினார்கள். இந்த சொற்பொழிவு எத்தனை தனிச்சிறப்புமிக்கதாக இருந்ததென்றால் கிருஸ்தவர்களின் பெரும் பெரும் தலைவர்களும் தன்னையும் மறந்து பாராட்டினார்கள். மேலும் நிச்சயமாக இந்த கட்டுரை மனித எண்ணங்களை எடுத்துரைத்துள்ளன. தர்பிய்யத் மற்றும் சான்றுகள் மற்றும் அதன் சிறப்புகள் மற்றும் அழகின் அடிப்படையில் முற்றிலும் தனித்தன்மை வாய்ந்ததாக உள்ளது என்று கூறினார்கள்.

எனவே இந்த சொற்பொழிவின் மூலம் இறைவன் அஹ்மதிய்யத் அதாவது உண்மை இஸ்லாத்தின் தூதுச் செய்தியை உலக மார்க்கத்தின் பெரும் பெரும் தலைவர்களுக்கு எட்ட வைக்க சந்தர்ப்பம் வழங்கி விட்டான். அவர்களும் இஸ்லாத்தின் உண்மைத்துவத்தை ஒப்புக் கொள்ளும் நிர்பந்தத்திற்கு ஆளானார்கள். இந்தப் புத்தகத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இஸ்லாத்தின் அழகிய போதனைகளை பல்வேறு அம்சங்களில் மிகவும் அழகிய முறையில் ஒளியூட்டியுள்ளார்கள்.

முதன் முதலில் அவர்கள் சூரா ஸாஃபாத்தின் வசனங்களிலிருந்து இந்த விஷயத்தை நிரூபணம் செய்துள்ளார்கள். அதாவது இங்கு நடைபெறுகின்ற இந்த மார்க்க மாநாடுகளின் செய்திகளைப் பற்றி இன்றிலிருந்து 1300 ஆண்டுகளுக்கு முன்பாகவே திருக்குர்ஆன் செய்தி வழங்கி விட்டது. அதன் பிறகு அன்னார் இஸ்லாத்தின் அறிமுகத்தை செய்து வைத்துள்ளார்கள். பின்னர் உறுதியான சான்றுகள் மூலம் அஹ்மதிய்யத் மற்றும் உண்மை இஸ்லாம் இரண்டும் ஒரே விஷயமாகும் என்பதை நிரூபணம் செய்தார்கள். அதன் பிறகு அன்னார் மார்க்கத்தின் நான்கு நோக்கங்களை எடுத்துரைத்தார்கள்.

அதன் அடிப்படையில் முதலில் இறைவன் தொடர்பான இஸ்லாமிய சிந்தனைகளை மிகவும் தெளிவுடன் எடுத்துரைத்தார்கள். மனிதன் தனது இறைவனுடன் எவ்வாறு தொடர்பு வைக்க வேண்டும் என்று இஸ்லாம் விரும்புகின்றது என்பதை விளக்கினார்கள். இறைவன் புறமிருந்து மனிதன் மீது என்ன, என்ன பொறுப்புகள் சுமத்தப்பட்டுள்ளன? என்பதையும் விளக்கினார்கள். இறைவன் மீது மட்டுமே நம்பிக்கை வைக்க வேண்டும். காரணிகளை எதையும் பயன்படுத்தக்கூடாது என்று இஸ்லாம் போதிப்பதாக கூறப்படும் கேள்விகளுக்கும் பதிலளித்தார்கள். அதாவது எல்லா பணிகளையும் இறைவனிடம் ஒப்படைத்து விட வேண்டும். கை, கால் அசைப்பதற்கு எந்த அவசியமும் இல்லை என்று முஸ்லிம்கள் மீது செய்யப்படும் ஆட்சேபனைகளுக்கு பதிலளித்தார்கள்.

இஸ்லாம் ஒருபோதும் அதுபோன்ற போதனையை வழங்கவில்லை என்பதை திருக்குர்ஆன் ஆதாரத்தின் மூலமாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் நிரூபணம் செய்தார்கள். இன்னும் கூறப்போனால், காரணிகளை முழுமையாக பயன்படுத்த வேண்டும். வழிமுறைகளை முழுமையாக பின்பற்ற வேண்டும். அதன் பின்னரே இறைவன் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். தவக்குல் என்பது காரணிகளை கைவிட்டு விடுவதன் பெயர் அல்ல. மாறாக, இறைவன் ஓர் உயிருள்ள இறைவன் ஆவான் என்ற நம்பிக்கையின் பெயர் தான் தவக்குல் ஆகும் என்பதை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அதில் விளக்கியுள்ளார்கள்.

பின்னர் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த விஷயத்திலும் ஒளிபாய்ச்சியுள்ளார்கள். அதாவது தற்போது இஸ்லாம் மட்டும்தான் மனிதனை இறைவனுடன் சந்திக்க வைக்க முடியும். ஏனென்றால் இஸ்லாம் இவ்வாறு வாதம் செய்கின்றது. எவரெல்லாம் இஸ்லாம் கூறும் போதனைக்கு ஏற்ப செயல்பட்டவாறு இறைவனை சந்திப்பதற்கு துடிப்புடன் இருப்பாரோ, நிச்சயம் இறைவன் அவருக்கு கிடைத்து விடுவான்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இஸ்லாத்தின் போதனையின்படி நடந்து இறைப் பண்புகளை வெளிப்படுத்தக்கூடிய நபர்கள் இஸ்லாத்தில் தோன்றி வந்துள்ளார்கள் என்பதையும் வெளிப்படுத்தினார்கள். இதுபோன்ற சந்தேகங்களை இஸ்லாத்தால் மட்டுமே தீர்த்து வைக்க முடியும். அந்த நபர்கள் இறை இருப்பை பற்றிய முழுமையான ஞானத்தை வழங்கியுள்ளார்கள். ஆக இக்காலத்தில் மக்கள் இறைவனது இருப்பை அடையாளங்கண்டு கொள்ள

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 29 April 2021 Issue No. 17

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

வேண்டும். சந்தேகம் மற்றும் ஐயங்கள் என்ற வாழ்க்கையிலிருந்து தூயவர்களாக இருக்க வேண்டும் என்பதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அல்லாஹ் அனுப்பியுள்ளான்.

அதன் பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் நல்லொழுக்கத்தின் பல்வேறு அம்சங்கள் பற்றியும் விரிவாக விளக்கியுள்ளார்கள். மேலும் இஸ்லாத்தின் நல்லொழுக்க போதனைகள் தான் முற்றிலும் முழுமையானது. மேலும் வேறு எந்த மார்க்கமும் அதனுடன் போட்டி போட முடியாது என்பதையும் நிரூபணம் செய்துள்ளார்கள். பின்னர் அன்னார் நல்லொழுக்கத்தின் அழகிய விதிமுறைகளையும் தீய ஒழுக்கங்களிலிருந்து தப்பிப்பதற்கான வழிமுறைகளையும் ஒளிபாய்ச்சியுள்ளார்கள். மேலும் ஒழுக்கத்தை சரி செய்து கொள்வது தொடர்பான இஸ்லாமிய போதனைகளையும் எடுத்துக் கூறினார்கள்.

அதன் பிறகு அன்னார் நாகரீகம் தொடர்பாக இஸ்லாமிய போதனைகளை எடுத்துரைத்துள்ளார்கள். மிகவும் நுட்பமான வழிமுறைகளில் நல்லொழுக்கம் மற்றும் நாகரீகத்திற்கும் இடையிலுள்ள வித்தியாசத்தை விளக்கியுள்ளார்கள். பின்னர் சமூகத்தில் பல்வேறு தரப்பட்ட மக்களுடன் மனிதனுக்கு உள்ள தொடர்புகள் எந்தெந்த வரம்புகளில் இருக்க வேண்டும் என்பது பற்றியும் ஒளிபாய்ச்சியுள்ளார்கள். பின்னர் குடியுரிமையின் விதிமுறைகளை எடுத்து வைத்துள்ளார்கள்.

அதன் பிறகு அரசாங்கம் மற்றும் பொது மக்களின் கடமைகள் மற்றும் உரிமைகள் பற்றி விரிவாக விளக்கியுள்ளார்கள். பின்னர் இந்த கட்டுரையை மேலும் விரிவுபடுத்தியவாறு அரசாங்களுக்கிடையே எத்தகைய தொடர்புகள் இருக்க வேண்டும் என்பது பற்றியும் ஒளிபாய்ச்சியுள்ளார்கள். மேலும் பல்வேறு நாடுகளில் பிரச்சனைகளை தீர்ப்பதற்கான திருக்குர்ஆனின் அழகிய விதிமுறைகளையும் எடுத்துரைத்துள்ளார்கள். மேலும் லீக் ஆஃப் நேஷனின் அடித்தளம் இந்த விதிமுறைகளின் கீழ் அமைக்கப்பட்டால் அது வெற்றி பெறும் என்று கூறினார்கள். அவ்வாறு அது வைக்கப்படவில்லை. எனவே அது தோற்றுப் போனது. எனவே UNO இந்த அளவில் செயல்படவில்லை என்பதால் அதுவும் தோற்றுக் கொண்டிருக்கிறது. தோற்றும் விடும்.

எவ்வாறிருப்பினும் புத்தகத்தின் இறுதியில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள், மரணத்திற்குப் பிறகு நிகழும் நிலைமைகளைப் பற்றி ஒளிபாய்ச்சியுள்ளார்கள். மேலும் மறு உலகில் கிடைக்கும் நற்கூலி மற்றும் தண்டனை பற்றியும் அதில் எடுத்துக் கூறியுள்ளார்கள். இந்த புத்தகத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் போதனை பற்றி மட்டும் கூறவில்லை. மாறாக, அந்த போதனைகளின்படி செயல்படக்கூடியவர்களின் உதாரணங்களையும் எடுத்துக் கூறியுள்ளார்கள். அதாவது அவர்கள் எவ்வாறு தங்களது வாழ்க்கையில் புரட்சியை ஏற்படுத்தினார்கள் என்பதையும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் போதனை அவர்களிடத்தில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதையும், மேலும் சிலர் தமது உயிரையும் அர்ப்பணித்து விட்டனர். எனினும் அன்னாரின் போதனையை கைவிட்டு விடவில்லை என்பதையும் எடுத்துக் கூறியுள்ளார்கள்.

இறுதியில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் முழு உலகிலும் வசிக்கக்கூடியவர்களுக்கு அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொள்ளுமாறு அழைப்பு விடுத்தவாறு அவர்களின் கஷ்டங்கள் நீங்குவதற்கான நேரம் வந்து விட்டதாக நற்செய்தியும் வழங்கினார்கள். இந்த யுகத்தின் தூதரின் கரத்தில் ஒன்றுகூடி விட்டால் பின்னர் அவர்கள் மார்க்கத்திலும், உலகத்திலும் வெற்றி பெற்று விடுவார்கள் என்று கூறினார்கள்.

(தஆருஃப் குதுப், அன்வாருல் உலூம் தொகுதி 8 பக்கம் 6–9)

கட்டுரை முடிவு பெற்றதும் கூட்டத்தின் தலைவர் பல்வேறு சொற்களில் தனது கருத்தை எடுத்துரைத்தவாறு இவ்வாறு கூறினார்: எனக்கு அதிகமாக பேசுவதற்கு அவசியம் இல்லை. கட்டுரையின் சிறப்பு மற்றும் அதன் மேன்மையை கட்டுரையே வெளிப்படுத்தி விட்டது. தற்போது மாநாட்டின் பார்வையாளர்கள் சார்பாக கட்டுரையின் சிறப்பு, கட்டுரையின் வரிசைக் கிரமம், அதன் எண்ணங்கள் மற்றும் உயர் தரமான ஆதாரங்களின் வலிமைக்காக ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு நான் நன்றி செலுத்துகின்றேன். பார்வையாளர்கள் முகத்தாலும், நாவின் நிலையாலும் எனது இந்த கூற்றை ஒப்புக் கொண்டுள்ளார்கள். அவர்கள் புறமிருந்து நன்று கூறுவதற்கு நான் பொருத்தமானவனாக இருக்கின்றேன் என்று நான் நம்புகின்றேன். நான் அவர்களின் எண்ணங்களை பிரதிபலிக்கும் உரிமையை செயலாற்றிக் கொண்டிருக்கிறேன்.

ஒரு சகோதரர் ஹஸ்ரத் சாஹிப் அவர்களிடம் வந்தார். மேலும் நான் இந்தியாவில் 30 ஆண்டுகள் பணி செய்துள்ளேன். நான் முஸ்லிம்களின் சூழல்களை ஆய்வு செய்துள்ளேன். ஏனென்றால் நான் ஒரு மிஷனரியாக இந்தியாவில் பணி செய்துள்ளேன். ஆனால் தாங்கள் எந்த சிறப்புடன், தெளிவுடன் மற்றும் மேன்மையுடன் இன்று இந்த கட்டுரையை முன் வைத்தீர்களோ நான் அதனை இதற்கு முன்பு எந்த கூட்டத்திலும் கேட்டதில்லை. கட்டுரை எண்ணங்களின் அடிப்படையில், வரிசைக் கிரமத்தின் அடிப்படையிலும், ஆதாரத்தின் அடிப்படையிலும் ஆழ்ந்த தாக்கத்தை கொண்டதாக இருக்கின்றது. நான் உங்களுக்கு வாழ்த்துக்களை கூறிக் கொள்கிறேன்.

மற்றொரு நபர் வந்தார். அவர் இவ்வாறு கூறினார்: நான் இந்த கட்டுரையை கேட்பதற்காக பிரான்ஸிலிருந்து வந்துள்ளேன். கிருஸ்துவத்தை விட நான் இஸ்லாத்திற்கு முன்னுரிமை வழங்கி வந்தேன். இஸ்லாத்தை விட புத்த மதத்திற்கு நான் முன்னுரிமை வழங்கினேன். நான் தற்போது தங்களின் கட்டுரையை கேட்டேன். புத்த மதத்தையும் கேட்டிருக்கின்றேன். உண்மையில் இஸ்லாம் தான் அனைத்து மார்க்கங்களை விட மேலான மார்க்கமாகும் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். மேலும் தாங்கள் எந்த அழகுடனும், சிறப்புடனும், அழகிய முறையிலும் இஸ்லாத்தை முன் வைத்திருக்கின்றீர்களோ அதற்கு வேறொரு மார்க்கம் போட்டிபோட முடியாது. எனது உள்ளத்தில் அதற்கு தற்போது ஆழமான தாக்கங்கள் உள்ளன. இன்னும் ஏராளமான நல்ல கருத்துக்கள் கூறப்பட்டிருக்கின்றன.

அடுத்து மிஸ் சார்பல்ஸ் என்ற இந்த மாநாட்டின் செயலாளர் சவுத்ரி சாஹிப் அவர்களிடம் இவ்வாறு கூறினார். நான் உங்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். மக்கள் உங்களுக்கு நன்றி தெரிவிக்கின்றனர். ஆண்களும், பெண்களும் என்னிடம் வந்தனர். அவர்கள் இந்த சொற்பொழிவை வெகுவாக பாராட்டினார்கள் என்று அதே பெண்மணி கூறினார்..

இங்கு பேராசிரியராக இருக்கின்ற ஜெர்மன் நபர் ஒருவர் ஜல்ஸாவிலிருந்து திரும்பி செல்கின்ற நேரத்தில் சாலையில் செல்லும்போது முன்னால் சென்று ஹஸ்ரத் சாஹிப் அவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தார். எனக்கு அருகில் பெரும் பெரும் ஆங்கிலேயர்கள் அமர்ந்திருந்தனர். அவர்கள் தங்களது தொடைகளை தட்டிக் கொண்டிருந்ததையும், Rare ideas. one can not hear such ideas everyday என்று கூறிக்கொண்டிருந்ததையும் நான் கண்டேன் என்று அவர் கூறினார்.

பொருள்: இவை மிகவும் அழகிய சிந்தனைகளாகும். இதுபோன்ற சிந்தனைகள் தினமும் கேட்பதற்கு கிடைக்காது.

*(தொடர்ச்சி 8 வது பக்கம்...)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad